


# வெள்ளி

# இரகசியப் பேச்சு...

ஏப்ரல் '72

30 சதம்

அன்புள்ள வாசகரே,

'வெள்ளி'க்கு ஓராண்டு பூர்த்தியாகியிருக்கிறது.

ஆரம்ப இதழில் நான் எழுதியிருந்ததுபோல 'வெள்ளி' சரியாகத் திட்டமிடப்பட்டு எழுந்தது. திட்டமிட்டு எதிர்பார்த்த பலன் கிட்டியிருக்கிறது. இது தான் உண்மையான வெற்றி!

"உங்களிடமிருந்து ஒரு தரமான இலக்கிய சஞ்சிகையைத்தான் எதிர்பார்த்தேன்; ஏமாந்தேன்" என்று எனக்கே எழுதியவர்களும், "போயும் போயும் வரதர் கல்கண்டுப் பாணியிலா இறங்கவேண்டும்?" என்று கிண்டல் செய்தவர்களும் உண்டு.

அவர்கள் ஒருவித கற்பனை உலகில் இருந்து பேசுகிறவர்கள்; அவர்களைப்பார்த்து நான் மெல்லச் சிரித்துவிட்டுப் பேசாமலிருந்துவிட்டேன்.

எனக்குப் பல நேயர்கள் எழுதியிருக்கிறார்கள்; நேரிலும் சொல்லியிருக்கிறார்கள், "வெள்ளியை வாங்கினால் நான் முதலிலிருந்து கடைசிவரை வாசித்துவிடுகிறேன்; சுவையாக இருக்கிறது" என்று. இது போதும் எனக்கு!

மக்களை வாசிக்கச் செய்யவேண்டும். வாசிக்கிறவர்களிடந்தான் கருத்துக்களைச் சொல்லமுடியும். அவர்கள் சஞ்சிகையைத் தொடாமலே இருந்துவிட்டால், எழுத்தாளர் எந்தக் கருத்தை எப்படி எழுதினாலும் என்ன பயன் ஏற்படப் போகிறது?

**வெள்ளியின் இரண்டாவது ஆண்டில் வாசகர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியை அறிவிக்கிறேன்:**


வெள்ளி மாதம் இருமுறை மலரப்போகின்றது! இந்த இதழை விட்டால், இன்னும் ஒரே ஒரு இதழ் மட்டுந்தான் உங்களுக்கு மாத இதழாகக் கிடைக்கும்.

மாதம் இருமுறையாக மாறுவதுடன் 'வெள்ளி'யின் அமைப்பு உள்ளடக்கம் ஆகியவற்றிலும் புதிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. உங்களுக்குப் பிடித்தமான ஒரு எழுத்தாளர் எழுதும் சுவையான தொடர்கதை ஒன்றும் மிக விரைவில் வெள்ளியில் ஆரம்பமாக இருக்கிறது.

தி. ச. வரதராசன்,
ஆசிரியர்.



நம்பிக்கை நாணயம் மிக்க
தங்க, வைர
நகைகளுக்கு
ராணி
ஆபரண மாளிகை
224, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.





# ஒரு புத்தகம் வெளிவந்திருக்கிறது!

'ஆல்றவுண்ட்' எழுத்தாளரான 'சில்லையூர் செல்வராசன்' எழுதிய ஒரு புத்தகம் வெளிவந்திருக்கிறது!

'தணியாத தாகம்' என்ற இந்த நூல் தமிழுக்குப் புதியது. இது ஒரு 'திரைப்படச் சுவடி'. சாதாரணமாகச் சொன்னால் இது ஒரு 'சினிமாக் கதைவசனப் புத்தகம்'. ஆனால் இந்தப் பெயரோடு எத்தனையோ குப்பைகள் வெளிவந்திருப்பதால் இதை அப்படிச் சொல்லக் கூடாது. இது ஒரு இலக்கியம்!

இதைப்படித்து முடித்ததும் ஒரு நல்ல நாவலை, மண்வாசனையோடு, படித்து முடித்த திருப்தி ஏற்படுகிறது. ஒரு நல்ல சினிமாவை, தமிழிலே இதுவரை பார்த்திராத உத்திகளோடு, பார்த்த கிளர்ச்சி ஏற்படுகிறது.

இக்கதையில் வருகிற அநேகபாத்திரங்களை சமீபத்தில் வெளிவந்த ஒரு சினிமாவிலும் பலர் பார்த்திருக்கலாம். அவர்களை இந்நூலில் உயிரோடு பார்க்கலாம். 'அங்கே' தலையுமில்லாமல் வாலுமில்லாமல் பார்த்த மூனியன், முருகன், கமலி, ஆகிய பாத்திரங்களை இங்கே முழுமையாகப் பார்க்கலாம். 'தீபா' என்ற ஒரு பண்புள்ள சிங்கள யுவதியைப் பார்த்து நெஞ்சு நிறையலாம்.

'இலங்கையிலிருந்து சிறந்த தமிழ்ப்படங்கள் வெளிவர வாய்ப்புண்டு, அவை உலகப் பரிசுகளைப்பெறவும் முடியும்' என்ற நம்பிக்கையைச் செல்வராசன் இந்த நூலின் மூலம் தந்திருக்கிறார்.

ஆனால், செல்வராசனிடமும் ஏதோ ஒரு குறை இருக்கத்தான் செய்கிறது, படம்தான்போச்சு; புத்தகமுமா இப்படி படுமோசமான பதிப்பாக வெளிவரவேண்டும்? (முற்றும்.)

[தணியாத தாகம், வெளியீடு: நவகலாமன்றம், 14 23-ம் ஒழுங்கை, கொழும்பு 3. விலை ரூபா 4-50]

# 'இரகசியப் பேச்சு... எதுவுமில்லை!'

ஜனநாயக நாடொன்றில் ஜனநாயகத் தத்துவங்களில் நம்பிக்கை வைத்து ஜனநாயக முறையில் இயங்கும் கட்சியொன்றை, எப்பாடுபட்டாயினும் ஒளித்து விட வேண்டும் என்று யாராவது நினைப்பார்களேயாயின், அவர்களின் செயல் ஜனநாயகத்துக்கு குழிதோண்டுவதாகவே அமையும்!

இந்த நாட்டிலுள்ள பிரபலமான தினசரிப் பத்திரிகைகள் பல தமிழரசுக் கட்சியை நடத்துகின்ற முறையைப்பார்க்கின்றபோது அவை இத்தகைய குழிதோண்டும் முயற்சியில்தான் முன்னணியில் நிற்பதாகச் சந்தேகிக்கவேண்டி இருக்கிறது!

தமிழரசுக் கட்சியினர் எவ்வளவுதான் மிகவும் தெளிவான முறையில் தங்களது கொள்கைகளை எடுத்துக் கூறியபோதிலும் அதனைப் புரிந்து கொள்ள மறுக்கின்றன இந்த நாட்டிலுள்ள பல தினசரிப் பத்திரிகைகள்!

ஒரு கட்சியின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ள மறுப்பதும், அவற்றை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதும் அப்படி ஒன்றும் பாதகமான செயல்கள் அல்ல! ஒரு ஜனநாயக நாட்டில் மிகவும் சர்வசாதாரணமாக நடை பெறக்கூடிய நிகழ்ச்சிகள் தான் இவை!

ஆனால்,

ஒரு கட்சியை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யும் போது அந்தப் பிரச்சாரம் உண்மையின் அடிப்படையில் அமையவேண்டும்!

அத்தகைய பிரச்சாரத்துக்குத்தான் மக்கள் மத்தியில் மதிப்பு ஏற்படும்!

தமிழரசுக் கட்சியைப் பற்றி எழுதும் போதெல்லாம் இல்லாத பல விஷயங்களைக் கற்பனை செய்தும், மிகவும் அற்பமான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தும் படுபாதகமான பொய்களை உற்பத்தி செய்தும்தான் இந்த நாட்டுத் தினசரிகள் பல எழுதிவந்திருக்கின்றன!

தமிழ்மக்களது பிரச்சினைகளை ஓரளவுக்கு அனுதாபத்துடன் அணுகும் "டெயிலிமிறர்" பத்திரிகை கூட, சில மாதங்களுக்கு முன்னால் தமிழரசுக் கட்சியின் பொதுக்குழு கூட்டம் ஒன்று முடிவடைந்ததும், 'கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான்' என்ற மாதிரி, "யாழ்தேஷ்" என்ற தலைப்பில் மிகவும் விஷமத்தனமானதொரு தலையங்கத்தை எழுதி இருந்தது:

"லேக்ஹவுஸ்" பத்திரிகைகளைப் பற்றியோ, குணசேன நிறுவனப் பத்திரிகைகளைப் பற்றியோ சொல்லவே வேண்டாம்!

தமிழரசுக் கட்சியைப் பற்றி எழுத நேரிடும் போதெல்லாம் ஒரு உற்சாகம் நிறைந்த படுபோக்கிரித்தனத்துடன் இந்தப் பத்திரிகைகள் நடந்து கொள்வது வழக்கம்!

சமீபத்தில் தமிழரசுக்கட்சித் தலைவர்களான செல்வநாயகமும் அமிர்தலிங்கமும் தமிழ் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்ததைப் பற்றியும் சில தினசரிகள் மிகவும் விஷமத்தனமான முறையில் செய்திகளை வெளியிட்டு இருந்தன!

அந்தச் செய்திகள் வெளிவந்த உடனேயே தமது சுற்றுப் பிரயாணம் தொடர்பான விரிவான செய்திகளை தந்ததோடு நில்லாது "எங்களிடம் எவ்விதமான ரகசியத்திட்டங்களும் கிடையாது" என்றும் அறிவித்தார் செல்வநாயகம்!

விஷமத்தனமான செய்திகளுக்குத் தந்த முக்கியத்துவத்தை விளக்கம் தரும் அவரது அறிக்கைக்குத் தரவில்லை இந்த நாட்டுத் தினசரிகளுட் சில!

இத்தகைய பத்திரிகைகளை ஜனநாயகத்தின் காவலர்கள் என்று சொல்ல முடியுமா?

★

தமிழரசுக்கட்சியின் கொள்கைளையும் அதன் நடவடிக்கைகளையும் ஆதரிப்பதற்காக நான் இதை எழுதவில்லை. அது வேறு விஷயம்.

ஆனால், திட்டமிடப்பட்டோ அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாகவோ அந்தக்கட்சிக்கு அநீதி செய்கிறார்களே,

அநீதி எங்கே நடந்தாலும் என்னால் சகிக்க முடிவதில்லை!




✤ 'பொரலுகொடச் சிங்கம்' பிலிப் குணவர்த்தன சில தினங்களுக்கு முன் காலமாகி விட்டார். இவருக்கு வயது 71. லங்கா சமசமாஜக் கட்சியைத் தோற்றுவித்தவர் இவர்தான். இந்நாட்டில் 'சோஷலிசத்தின் தந்தை' என்று புகழப்படுபவர். ஆனாலும் இவர் தமது பல்கலைக் கழகப் படிப்பை முதலாளித்துவ நாடான அமெரிக்காவிலேயே கற்றார் என்பது குறிப்பிடத் தக்கது. இவர் மறைந்தாலும் இவருடைய கண்கள் மறையவில்லை. இவரின் விருப்பப்படி இவரது இரண்டு கண்களும் எடுக்கப் பட்டு, பார்வையற்ற இருவருக்குப் பொருத்தப்பட்டிருக்கின்றன!

✤ 1945-ம் ஆண்டு கேரளத்தில் 12 எழுத்தாளர்கள் கூடி 'இலக்கியச் சேவையாளர் கூட்டுறவுச் சபை' ஒன்றைத் தொடக்கினார்கள். அவர்கள் போட்ட மூலதனம் ரூபா 120 மட்டுமே! அன்று அவர்கள் நட்ட சிறுவிதை இன்று பெரிய ஆலமரமாக வளர்ந்திருக்கிறது. செலுத்தப்பட்ட மூலதனமாக இன்று 8 லட்சம் ரூபாவைக் கொண்டிருக்கிறது இந்தத் தாபனம். இன்று கேரளாவில் மிகப் பெரிய பிரசுராலயம் இதுதான். சராசரி ஒரு நாளுக்கு ஒரு புத்தகம் வீதம் இவர்கள் வெளியிடுகிறார்கள். இதுவரை 2500 புத்தகங்களுக்குமேல் வெளியிட்டிருக்கிறார்கள். வருடாந்த விற்பனை 25 லட்சம் ரூபாவுக்கு மேலே போயிருக்கிறது. எழுத்தாளர்களுக்கு 30 சத வீத உரிமைப் பணமும் போனசும் கொடுக்கிறார்கள். இந்தியாவிலுள்ள வெற்றிகரமான 12 கூட்டுறவுத் தாபனங்களில் இதுவுமொன்று எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். எழுத்தாளர்கள் சேர்ந்தும் இப்படி ஒரு உருப்படியான காரியத்தை வெற்றிகரமாகச் சாதிக்க முடியுமென்பதை எங்கள்நாட்டு எழுத்தாளர்கள் கவனிக்கவேண்டும்!

✤ சென்றவாரம் குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் 'ஈழகேசரிப் பொன்னையா' நினைவு தினம் நடைபெற்றது. இதில் முக்கிய நிகழ்ச்சி: இரசிகமணி கனகசெந்திநாதனின் 3 நூல்களின் வெளியீடு. திறவாத படலை, கடுக்கனும் மோதிரமும், ஈழத்துத் தமிழ் நூல் வழிகாட்டி ஆகிய 3 நூல்களுக்கும் அங்கே வெளியீட்டுவிழா நடைபெற்றது. பல திறப்பட்ட இலக்கிய நண்பர்களும் அங்கே கூடியிருந்தது ஒரு அரிய நிகழ்ச்சி. இலக்கிய நண்பர்களின் 'செல்வர்' கனக செந்திநாதன்!

✣ எம். பி. களின் பெருமையை அடித்தளமாகக்கொண்டு இயங்குபவை சில அரசியல்கட்சிகள்! தொண்டர்களின் உழைப்பை அடித்தளமாகக்கொண்டு இயங்குபவை வேறு சில அரசியல் கட்சிகள்! தொண்டர்களின்



உழைப்பை அடித்தளமாகக் கொண்டு இயங்கும் அரசியல் கட்சிகள் தமிழ்மக்கள் மத்தியில் இரண்டே இரண்டுதான்—ஒன்று கம்யூனிஸ்ட் கட்சி, மற்றது தமிழரசுக் கட்சி! ஆனல் கடந்தசில மாதங்களாக தொண்டர்களின் கட்சியாக இல்லாமல் எம். பி. களின் வசதிக்கேற்றபடி பயன் படக்கூடிய முத்திரையாக தமிழரசுக் கட்சியை மாற்றுவதற்கான முயற்சிகள் நடைபெற்று வந்திருக்கின்றன! இந்த முயற்சிகளின் உச்ச கட்டம் இப்போது வந்திருக்கிறது — சில திறமையானதில்லு முல்லுகளின் விளைவுதான் அமிர்தலிங்கம் தமது பதவியை ராஜினமாச் செய்திருப்பது!

✣ லண்டனில் ஒரு பிரபல வைத்தியசாலை இருக்கிறது. அங்கே மனிதர்களுக்கு வைத்தியம் செய்வதில்லை. பொம்மைகளுக்குத்தான் வைத்தியம் செய்கிறர்கள். உடைந்து சேதப்பட்ட சிலைகள், சிற்பங்கள், பொம்மைகளை இங்கே நேர்த்தியாகச் சீர்செய்து கொடுக்கிறர்கள். 'பரி எல்டர்' என்பவர் இந்த வைத்தியசாலையை நடத்துகிறர்.

✣ வரலாற்றுப் பெரியார்களின் நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்துவருவது உலகெங்கும் வழக்கம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் ஆறுமுக நாவலரைப்பற்றித்தான் திரும்பத்திரும்பப் பேசிக்கொண்டிருக்கிறேம். ஆனல் அவர் வாழ்ந்த இடமும் நினைவுச் சின்னங்களும் இதுவரையும் தனிப்பட்டவர்களின் சொத்துக்களாகவே இருந்துவந்திருக்கின்றன. இப்போது இக்குறை நீங்கிவிட்டது! நாவலர் வாழ்ந்த இடத்தையும், அவருடைய சொத்துக்களையும் பொதுச் சொத்தாகப் பிரகடனம் செய்திருக்கிறர்



கலாச்சார அமைச்சர் எஸ் எஸ். குலதிலகா. அமைச்சரையும் அவருக்குத் தூண்டுதலாக இருந்தவர்களையும் தமிழ் மக்கள் நன்றியோடு நினைவில் வைத்திருப்பார்கள்.



✣ வட இந்தியாவில் பூனா நகரில் ஒரு சுப்பிரமணியர் கோயில் இருக்கிறது. அதன் வாயிலில் "திருமணமாகாத பெண்கள் உள்ளே சென்று வழிபடக்கூடாது" என்று எழுதியிருக்கிறது. வட இந்தியாவில் சுப்பிரமணிய சுவாமி திருமணமாகாத பிரமச்சாரி! அவருடைய பிரமச்சரிய விரதத்துக்குப் பங்கம் செய்யக் கூடாதென்ற காரணத்தினால்தான் கன்னிப்பெண்களுக்குத் தடை!

✣ சுதந்திர வங்காள தேசத்தை இப்போது இலங்கை அரசாங்கமும் அங்கீகரித்துவிட்டது. வங்காள தேசத்தில் ஷேக் முஜிபுர் ரெஹ்மான் தலைமையிலான புதிய அரசாங்கம் அமைந்த பின்னரும் பலநாட்களாக நமது வானொலியினர் "டாக்கா நிர்வாகம், டாக்கா நிர்வாகம்" என்றுதான் சொல்லிக்கொண்டு வந்தார்கள். கேட்கவே அசிங்கமாக இருந்தது. அமெரிக்க வானொலிகூட "பங்களாதேஷ்" என்று சொல்லிக்கொண்டிருந்த நேரத்தில் நமது வானொலியினர் அப்படி அழைக்க கூச்சப்பட்டுக்கொண்டு இருந்தார்கள், இப்போது இலங்கை அரசாங்கம் வங்காள தேசத்தை அங்கீகரித்தபின்னர் நமது வானொலியிலிருந்து அந்த அசிங்கமான சொல் போய்விட்டது! நமது வானொலி இப்படி நடந்துகொண்டதற்கு காரணம் என்ன? மேலிடத்து உத்தரவா அல்லது மேலிடத்தை திருப்தி செய்ய நினைத்த யாராவது அதிகாரியின் தான்தோன்றித்தனமான நடவடிக்கையா?

✣ நல்ல லட்சியங்களுக்காக உண்மையிலேயே உழைப்பவர்கள் அந்த லட்சியம் நிறைவேறாவிட்டாலும் கூட மக்களால் மதிக்கப்படுகிறார்கள். தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்துக்கு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு தனி மதிப்பு இருப்பதற்கு இதுதான் காரணம்!

✣ வேறு வேறு ஜாதியினருக்கு எத்தனை எத்தனையோ வகையான பொழுதுபோக்குகள் இருக்கின்றன! பார், ஓட்டல், நைட்கிளப் இப்படி எத்தனையோ! தமிழ் மக்களைப் பொறுத்த அளவில் பெருமளவில் அவர்களது பொழுதுபோக்குக்குப் பயன்படுவது சினிமா ஒன்றுதான்! இதனால்தான் தமிழ் சினிமாப் படங்களில் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைய இடம் பெறுகின்றன! பாடல், நடனம், சண்டை என்று எல்லா அம்சங்களும் நிரம்பப் பெற்றவையாக தமிழ்ப் படங்கள் தயாரிக்கப்படுவதற்கும் இதுதான் காரணம்!

## 'கை விரல்கள் கீறியதை காதலென ஏமாந்தோம்!'

'பல்கலைவேந்தர்' சில்லையூர்ச் செல்வராசன் சமீபத்தில்வெளியிட்ட 'தணியாத தாகம்' என்ற 'ஒரு திரைப்படச் சுவடி'யிலே மூன்று பாடல்களையும் எழுதியிருக்கிறார். கதையோடு சென்று, இசையமைப்போடு அவற்றைக் கேட்கும் போது நிச்சயம் மெய் சிலிர்த்துவிடும்!

'ஈழத்துக் கண்ணதாசன்' என்று இவருக்கு ஒரு பட்டம் கட்டலாமா என்று நினைத்தேன். ஆனால் அது தவறு. 'கொஞ்சம் கொஞ்சம்' கண்ணதாசனின் பிடி இருந்தால் அப்படிச் சொல்லலாம். இவர் கண்ணதாசனின் கவித்துவத்துக்குச் சற்று குறைவில்லாதவர், சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஏற்பட்டால் கண்ணதாசனுக்கும் மேலே போய்விடமாட்டாரென்பது என்ன நிச்சயம்!

'தணியாத தாக'த்தின் கதாநாயகன் சோமு ஒரு அமைச்சூர்க்கவிஞன். அவன் எழுதியதாக செல்வராசன் ஒரு கவிதை எழுதியிருக்கிறார்... ...... படியுங்கள் :

சோலையிலும் சாலையிலும்
சுற்றிக் களித்துலவி
வாலை மிடுக்கில்
மயக்கடைந்து மாலையிலே
ஆழி யருகில்
அமர்ந்தன்பாய் இடைதழுவி
நாழிக் கணக்காக
நன்னிலவிற் கண்செலுத்தி
கரை கழுவும் கடலருகின்
கடுகு மணல் மீதினிலே
கை விரல்கள் கீறியதைக்
காதலென ஏமாந்தோம்!

# கேள்வி பதில்

**செல்வி கமலாவதி,**
**யாழ்ப்பாணம்:**

எனது காதலன் எத்தனையோ உறுதி மொழிகளைத் தருகிறார். ஆனால் ஒன்றையும் காப்பாற்றுகின்றாரில்லை. என்ன செய்யலாம்?

பயப்படாதீர்கள்! உமது காதலன் ஒரு பக்கா அரசியல் வாதியாக வரப்போகிறார்! உறுதி மொழிகளைக் கொடுத்து விட்டு அதைப்பற்றி சிந்திக்காமல்கூட இருப்பது ஒரு அரசியல் வாதியின் இலட்சணம் அல்லவா!

**க. நடராசா, குருநாகல்,**

எனது நண்பன் என்னிடமிருந்து சிறிது சிறிதாக விலகிச்செல்கிறான். காரணம் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை?

மிகவும் குறைவாகப் பயன்படுத்தும்போதுதான் நட்பு நிலைத்திருக்கிறது! அடிக்கடி பயன்படுத்தினால் நட்பு கரைந்து போய்விடும்!

**கு. இராமச்சந்திரன், பசறை:**

பணத்துக்கும் புகழுக்கும் தொடர்பு உண்டா?

ஆம்! இந்தக் காலத்தில் இந்த இரண்டும்தான் மிக நெருங்கிய கூட்டாளிகள்! பணத்தைப் பயன்படுத்தி புகழைச் சம்பாதிக்கிறார்கள் புகழைப் பயன்படுத்தி பணத்தைச் சம்பாதிக்கிறார்கள்! இந்தக் காலத்தில் இதுதான் நடக்கிறது!

“சாவி”

**க. ராஜநாதன்,**
**ஊர்காவற்றுறை:**

பாகிஸ்தான் ஜனாதிபதி பூட்டோவுடன் ஒப்பிடக்கூடிய நமது அரசியல்வாதிகள் யார்?



தமிழ் காங்கிரஸ் எம். பி. கள்! சுயநலம் ஒன்றுதான் இவர்களது அரசியல்கொள்கை!

**எஸ். நடேசபிள்ளை, கொழும்பு.**

எனது நண்பர்களை என்னால் நம்ப முடியவில்லை?

உண்மைதான்! இந்தக் காலத்தில் நண்பர்களாக நடிப்பவர்கள் அநேகர்! பணம் அல்லது அதிகாரம் நம்மிடம் இருக்குமட்டும் இந்திரன் சந்திரன் என்று புகழ்ந்தபடி நம்மைச் சுற்றி இருப்பார்கள்! நம்மிடம் பணமோ அல்லது அதிகாரமோ இல்லாது போனவுடன் மிட்டாயில் மொய்த்துக்கொண்டிருந்த ஈ மாதிரி பறந்துபோய்விடுவார்கள்!

கே. தியாகமணி, மாவனல்லை.

ஓராண்டு பூர்த்தியாகும் 'வெள்ளி' கடந்த ஆண்டில் சாதித்தது என்ன?

இவ்வளவு மிகக் குறுகிய காலத்திலேயே இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் 'வெள்ளி' மிகப் பிரபலமாகி விட்டதே! விற்பனையில் இந்தியச் சஞ்சிகைகளுக்கு நிகராக நிற்கிறதே! இதுவே ஒரு சாதனை அல்லவா!

செல்வி ராஜேஸ்வரி, களனி.

என் உறவினர் ஒருவருக்கு கல்யாணம் ஆகி நான்கு வருடம் ஆகின்றது. இன்னும் அவருக்கு குழந்தை இல்லை என்கிறார்!

எனது உறவினர் ஒருவர் இருக்கிறார். கல்யாணம் ஆகி நான்கு வருடம் ஆகின்றது. இப்போது நான்கு குழந்தைகளுக்கு தந்தையாகிவிட்டார். தள்ளாடுகிறார்! எனது உறவினரைக் காட்டிலும் உமது உறவினர் பரவாயில்லை!

செ. ஜெகசோதி,
அராலி தெற்கு.


இலங்கையில் இதுவரை தயாரிக்கப்பட்ட திரைப் படங்களில் சிறந்தது 'வெண் சங்கு' என்பது அநேகரின் கருத்து. உங்கள் கருத்து என்ன?

எமதுநாட்டுத் திரைப்படங்களைப்பற்றி 'உயர்வு-தாழ்வு' சொல்வதற்கு ஏற்ற காலம் இன்னும் வரவில்லை, சற்றுப் பொறுத்திருங்கள்.

எஸ். திருநீலகண்டன், கண்டி.

தனிப்பெருந்தலைவர் ஜி.ஜி! இப்போது எங்கே?

தேர்தலில் தோற்றுப்போனதும் எங்கெங்கோவெல்லாம் போய்ச் சுற்றினர்! திரும்பி வந்



தார்! பத்திரிகைகளில் பிரமாதமாக செய்திகள் வந்தன! வளர்த்த கடா மார்பில் பாயும் நிலையில் இருப்பதைக் கண்டார்! வந்தசுவடு தெரியாமல் எங்கோ போய்ச் சேர்ந்துவிட்டார்! இவரல்லவா தனிப்பெருந்தலைவர்!


ச. ஜெகநாதபிள்ளை, உவெஸ்லி உயர்தர பாடசாலை, கல்முனை.

தமிழரசுத் தந்தை செல்வா அவர்களின் இந்தியப் பிரயாணம் பற்றி உங்கள் கருத்து என்ன?

இப்பிரயாணம்பற்றி 'சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர் 'கோவை மகேசன்' தமக்கே உரித்தான பாணியில் மிகவும் அழகாக தமது பத்திரிகையில் எழுதியிருக்கிறார்! அவர் தெரிவித்துள்ள கருத்துக்களில் பெரும்பாலானவையே எனது கருத்துக்களும்!

**ஆர். ஜெகநாதன், கொழும்பு.**

**தமிழ் நாட்டில் தி. மு. க. ஆட்சியின் கீழ் வேகமாக பாசிஸ போக்குகள் வளர்ந்து வருகின்றன என்றும் இதை எதிர்த்து ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்கும்படி எதிர்க் கட்சிகளுக்கு பழைய காங்கிரஸ் தலைவர் காமராசர் வேண்டுகோள் விடுத்திருப்பதாகவும் பல செய்திகள் தெரிவிக்கின்றனவே! இது எதைக் காட்டுகிறது?**



தி.மு.க. வைத் தாக்குவதற்கு தனது தனிக்கட்சியின் பலத்தில் நம்பிக்கை இல்லாத காமராசர் தனது காரியத்தைச் சாதிப்பதற்கு பிற கட்சிகளின் துணையாவது கிடைக்குமா எனப் பார்க்கிறார் என்பதைத்தான்!

**த. தயாநிதி, பெல்மதுளை.**

**கவிதைகள் அனுப்பினால் பிரசுரிப்பீர்களா?**

புதுமையான முறையில் சுவையான கவிதைகளை ஒரு பக்கத்துக்குள் அடங்கக்கூடிய முறையில் உங்களால் எழுத முடியுமானால் எழுதுங்கள்! நிச்சயமாகப் பிரசுரிப்போம்!

சக்திவேந்தன், கல்முனை.

இந்தியாவில் இப்போது புகழ் மிக்க சினிமா நடிகர் யார்?

ராஜேஷ் கன்னா! இவருக்கு இப்போது இருக்கும் புகழ் வேறு எந்த நடிகருக்குமே கிடையாது! இவர் எங்கே போனாலும் இளைஞர்கள் இவரை மொய்த்துக் கொள்கிறார்கள்! குறிப்பாக இளம் பெண்கள் மத்தியில் இவருக்கு இருக்கும் புகழ் எக்கச்சக்கமானது!

யோ. யோகேஸ்வரன்,
யாழ். இந்துக்கல்லூரி.

ஒரு தபால் அட்டையின் விலை இரு மடங்காகியுள்ள இந்நேரத்தில் ஒரு அட்டையில் இருகேள்விகள் எழுதி அனுப்பலாமா?

உமது வேண்டுகோள் மிகவும் நியாயமானது! ஒரு அட்டையில் எத்தனை கேள்விகளை வேண்டுமானாலும் எழுதி அனுப்புங்கள்! ஆனால் ஒரு முறையில் ஒருவர் கேட்கும் ஒரு கேள்விக்கு மட்டுந்தான் பதில் தரப்படும்! பெரும்பாலான வாசகர்களுக்கு இடம் தருவதற்காகத்தான் இந்த ஏற்பாடு!

கே. நமசிவாயம், கொழும்பு.

பத்திரிகைச் செய்திகளா அல்லது வானொலிச் செய்திகளா மக்கள் மத்தியில் வேகமாகப் பரவுகின்றன?

இரண்டுமல்ல! வம்பளக்கப்படும் செய்திகள்தான் படுவேகமாகப் பரவுகின்றன!

சி. தவனேசன், சண்டிலிப்பாய்.

இந்தியர்கள் புத்திசாலிகளா?

ஆம், நிச்சயமாக! வியட்நாமுக்குள் நுழைந்த அமெரிக்கர்கள் அங்கிருந்து வெளியேறாத காரணத்தால் அமெரிக்காவை உலகம் முழுவதுமே பலத்த சந்தேகத்தோடு நோக்கிக்கொண்டிருக்கிறது! ஆனால் வங்காள தேசத்துக்குள் நுழைந்த இந்தியர்களோ எவ்வளவு விரைவில் அங்கிருந்து வெளியேற முடியுமோ அவ்வளவு விரைவில் வெளியேறி உலக நாடுகள் அனைத்தினதும் பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறார்கள்! இதை விடப் புத்திசாலித்தனம் வேறு என்ன இருக்கிறது?

ஆர் இராசரத்தினம்,
யாழ்ப்பாணம்.

கள்ளுக்கும் தவறணைமுறையாமே?

ஆம். கடன் சொல்லிக் கள்ளுக் குடிப்பவர்களுக்கு கஷ்டம் வரப்போகிறது. தவறணைகளில் கடன் கொடுக்கமாட்டார்கள்!

க சண்முகம், கொக்குவில்.

இன்று வசதியோடு இருப்பவர்கள் யார்?

எந்தவிதமான கொள்கைகளும் இல்லாமல் எம். பி. களுக்குப் பின்னால் அவர்களுக்குக் 'குல்லா' போட்டபடி திரிபவர்கள்!


மு. சிவானந்தன்,
யாழ்ப்பாணம்.

அண்ணாவின் வாரிசு கருணாநிதி. கருணாநிதியின் வாரிசு யார்?

தி. மு. க. வில் உள்ள மற்றைய தலைவர்கள் எல்லாரும் கருணாநிதியை விட வயதில் மூத்தவர்கள். எனவே, கருணாநிதியின் வாரிசாக இவர்களில் யாரும் வரமுடியாது! கருணாநிதியின் வாரிசு இரண்டாம் அணித் தலைமையிலிருந்துதான் வரவேண்டும்! தி. மு. க. வில் இரண்டாம் அணியைத் தலைதூக்கவிடாமல் முற்றாக மறைத்துக்கொண்டு இருக்கிறது முதலாம் அணி!

கே. நாகராசா, திருமலை.


மட்டக்களப்பு இராசதுரை விடாப்பிடியாக தமிழரசுக் கட்சித் தலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கு கங்கணம் கட்டி நிற்கும் காரணம் என்ன?



தமிழரசுக்கட்சி இதுவரை காலமும் நடந்துவந்த பாதையைக் கைவிட்டு ஒரு புதிய பாதையில் செல்லவேண்டும் என்பது அவரது கருத்து! புதிய பாதையில் சென்றால் ஒரு இன்பமயமான எதிர்காலம் கிடைக்கும் என்று அவர் கருதுகிறார்!

ஜே. சின்னத்தம்பி,
வாக்கர்ஸ், என். வி ஏ. பகுதி,
முகத்துவாரம் (கொழும்பு 15).
[ பரிசுபெறும் கேள்வி ]

திரு எஸ் ஜே. வி செல்வநாயகம் அவர்களின் தனி நாடு கோரிக்கையைப் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?



தான் தனிநாடு கோரவில்லை என்பதையும், சமஷ்டி ஆட்சியையே கோருவதாகவும் அவரே பல தடவைகள் விளக்கம் தந்திருக்கிறார்! இந்த நாட்டுப் பத்திரிகைகள்தான் அவரது கருத்துக்களை தவறான முறையில் வெளியிட்டுவருகின்றன! இந்த நாட்டிலுள்ள பெரிய தினசரிப் பத்திரிகைகள் எல்லாம் சுய லாபத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்ட ஒருசிலரின் கைவசம் இருப்பதுதான் இதற்குக் காரணம்.

ஐ. ஜோன், அல்வரய் தெற்கு.

என்னை எல்லாரும் 'வெறும் புழுகன்' என்கிறார்கள். நான் நினைத்தால் அவர்களை ஒரு நொடியில் மடக்கி விடுவேன், செய்யட்டுமா?

அடடே, எல்லாரும் உம்மை நன்றாகத்தான் அறிந்திருக்கிறார்கள். நன்றாக அறியாவிட்டால் மிகவும் பொருத்தமான பெயரால் உம்மை அழைக்க முடியாதல்லவா!

பொ. கலைச்செல்வி, ஏழாலை.

சென்ற ஆண்டு பத்திரிகைகளில் அதிக இடத்தைப் பிடித்துக்கொண்ட அரசியல்வாதி யார்?

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி! சென்ற ஆண்டில் அவருக்குக் கிடைத்துள்ள அரசியல் முக்கியத்துவம் வேறு யாருக்குமே கிடைக்கவில்லை!

''பிரஸ்டீஜ்'' வசந்தா,
கொழும்பு, 13.

கட்டிய மனைவியின் தாலியைக் கழற்றி விற்ற குருட்டுக் கருணாநிதி போன்ற படு பிற்போக்குவாதிகள் இருக்கும் வரை தமிழுக்கும் தமிழகத்திற்கும் ஒருபோதுமே விடிவு ஏற்படாது என நிரூபிக்கக் காத்திருக்கிறேன்!

உமது கேள்வியைப் பார்க்கும் ஒருசிலர் 'என்ன இது இவ்வளவு அநாகரிகமாக எழுதப்பட்டிருக்கிறதே' என்று நினைக்கக்கூடும்! தமிழகத்தின் பிரபல எழுத்தாளரான ஜெயகாந்தன் ஒருகாலத்தில் உம்மைவிட அநாகரிகமான முறையில் கருணாநிதியை தாக்கி எழுதியிருக்கிறார்! அது ஒருசிலரின் இயல்பு! பிறரது திட்டுதல்களையே படிகளாகக்கொண்டு உயர்ந்த தலைவர் கருணாநிதி!

மு. சிவநடராசா, நெல்லியடி:

காதல் என்றால் என்ன?

சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை!

சொல்லின் செல்வன்,
கொட்டடி:

நடிகர்களுக்கு ஆதரவுப் பத்திரிகைகள் வெளியிடுவதை நீங்கள் விரும்புகிறீர்களா?

இல்லை! ஒரு நடிகன் மிகுந்த புகழோடு இருக்கப்போவது மிகக் குறைந்த காலத்துக்குத்தான்! நடிகனின் புகழ் மங்கும்போது பத்திரிகைகளின் ஆயுசும் முடியவேண்டும் என்று கருதுகிறவர்கள் மிகவும் தாராளமாக நடிகர்கள் ஆதரவுப் பத்திரிகைகள் தொடங்கலாம்!




எம். நவாஸ், கொழும்பு:


இலங்கை முன்னேறவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்?

எந்த அயல் நாட்டிடமிருந்தும் எந்தவிதமான உதவியையும் நாம் பெற்றுக்கொள்ளக் கூடாது! நமது உழைப்பை மட்டுமே நாம் நம்பியிருக்க வேண்டும்! உழைப்பவர்கள் மட்டுமே இந்த நாட்டில் உயர்வானவர்களாக மதிக்கப்படவேண்டும்!

✣ ஒரு காலத்தில் என். எம். பெரேரா, கொல்வின் ஆர் டி. சில்வா, பீட்டர் கெனமன் ஆகியோருக் கெல்லாம் குரு மாதிரி இருந்தவர் பிலிப் குணவர்த்தனா! ஆனால் இப்போதோ இடதுசாரித்தலைவர்கள் யாருமே பிலிப்பை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. எல்லாருமே குருவுக்கு மிஞ்சிய சீடனாகி விட்டார்கள்! ஏன்-பிலிப் குணவர்த்தனாவின் மகன் இன்டிகா குணவர்த்தனா கூட தனது தந்தையின் கட்சியில் இல்லை! கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான பீட்டர் கெனமனைத்தான் தனது குருவாக மதித்து நடந்து வருகிறார் இன்டிகா குணவர்த்தனா!

✣ பாகிஸ்தான் ஜனாதிபதி பூட்டோவைப் போல சந்தர்ப்பவாத அரசியல்வாதி இந்த உலகத்திலேயே யாரும் கிடையாது! தனது எண்ணம் நிறைவேறவேண்டுமானால் யார் காலைப் பிடிப்பதற்கும் இவர் தயங்கமாட்டார்! அதேபோல யாரை வேண்டுமானாலும் காலை வாரிவிடவும் இவர் தயங்கமாட்டார்! நிரந்தர நட்பு என்பது இவரிடம் காண முடியாத ஒரு குணம்!

✤ "எதிர்க் கட்சித் தலைவராக இருப்பதைக் காட்டிலும் ஒரு கூட்டுத்தாபனத் தலைவராக இருப்பது எவ்வளவோ வசதியானது" என்று ஜே. ஆர். ஜெயவர்த்தனா பேசியிருக்கிறார்! கூட்டுத்தாபனத் தலைவர்கள் பொதுமக்கள் பணத்தில் அனு



பவிக்கும் சொகுசு வாழ்க்கையைத்தான் தனக்கே உரிய முறையில் கிண்டல் பண்ணி இருக்கிறார் ஜே. ஆர்! கூட்டுத்தாபனத் தலைவர்கள் பலர் இப்போது மகராஜாக்கள் மாதிரித்தான் வாழ்ந்து வருகிறார்கள்!


✤ இலங்கையைச் சுற்றியுள்ள கடல் பிரதேசத்தில் இறால், நண்டு, சிங்க இறால் என்பன பெருவாரியாக உள்ளன. இவற்றிற்கு அவுஸ்திரேலியாவிலும் மற்றும்பல மேல் நாடுகளிலும் பெரும் கிராக்கி இருக்கிறது. அந்நியச் செலாவணி பற்றாக் குறையாக இருக்கிறதே என்று நாம் ஆலோலம் பாடுகின்றோம். நமது கடற்றொழிலை விருத்தி செய்தாலே போதும். நமது நாடு பொன் கொழிக்கும் பூமியாகிவிடும்!

✤ தமிழ் காங்கிரஸ் தலைவர்களுள் உடுப்பிட்டி சிவசிதம்பரத்துக்கு எப்போதுமே தமிழ் மக்கள் மத்தியில் நல்ல மதிப்பு உண்டு. இவர் மெத்தப் படித்தவர் என்பதனாலோ அல்லது பெரும் பணக்காரர் என்பதனாலோ இவருக்கு இந்த மதிப்பு வந்து சேரவில்லை! தமிழ் மக்கள் மிகவும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டிய நேரங்களிலெல்லாம் அதனை உணர்ந்து தமிழ்த் தலைவர்கள் அனைவருடனும் மிகவும் ஒற்றுமையாக இவர் காரியமாற்ற முன்வருவதனால்தான் காங்கிரஸில் இருந்த போதிலும் ஒரு மதிப்பு மிக்க தலைவராக இவர் விளங்கி வருகிறார்!

✤ மாணவர்களை உருவாக்கும் பொறுப்பு நல்ல ஆசிரியர்களுடையது. நல்ல ஆசிரியர்களை உருவாக்கும் பொறுப்பு பயிற்சிக் கலாசாலைகளைச் சேர்ந்தது. ஆனால் இப்போது சில ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் அரசியல் தலையீடு மிகவும் அதிகமாக இருக்கிறது. தரங் குறைந்த பலர் ஆசிரிய பயிற்சிக்காக அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களுக்கு 'ஒரு மாதிரி' யான பயிற்சிகொடுத்து பாஸ் பண்ணச் செய்தால் போதும் என்று மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருக்கிறதாம். இந்த ஆசிரியர்களிடம் படிக்கப்போகும் மாணவர்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். வேலியே பயிரைமேய்கிறது! ஆசிரியர்களின் தரம் குறைவதற்கு கல்வி அமைச்சே காரணமாக இருக்கிறதா!

✢ தமிழரசுக் கட்சியின் இரண்டாவது வரிசைத் தலைவர்களில் முன்னணியில் இருப்பவர் அட்வகேட் ஆலாலசுந்தரம், தமிழரசுக் கட்சி நண்பர்கள் இவரை "அடலேறு ஆலாறு" என்று செல்லமாக அழைப்பார்கள். அந்தப் பட்டத்துக்கு மிகவும் பொருத்தமானவர் இவர். அமரர் வன்னியனாரின் கைக்குள் வளர்ந்த இலட்சிய வீரரான இவர் மிகவும் நகைச்சுவை ததும்பப் பேசக்கூடியவர். அடுத்த தேர்தல் வரும்போது இவருக்கு ஒரு பிரச்சினை காத்து இருக்கிறது. கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிடுவதா என்பது தான் அந்தப் பிரச்சினை, எந்தத் தொகுதியில் போட்டியிட்டாலும் வெற்றி இவருக்குத் தான் என்பதுமட்டும் நிச்சயம்!

✢ முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவியாக இருந்தவரும் கென்னடியின் மறைவுக்குப் பின்னர் கிரேக்க கோடீஸ்வரரான ஒனாசிஸை மணந்து கொண்டவருமான ஜாக்குலினைப் பற்றி எப்போதும் ஏதாவது பரபரப்பான செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன! ஒரு புகைப்படக்காரருக்கும் ஜாக்குலினுக்குமிடையில் நடைபெற்று வரும் வழக்கு இப்போது பிரமாதப்படுகிறது! எப்போதும் பத்திரிகைகளில் செய்தி வரும்படியாக இருந்தால்தான் மிகுந்த புகழோடு இருக்கலாம் என்பது ஜாக்குலினுக்கு நன்கு தெரியும்; அதனால் வேண்டுமென்றே அவர் இப்படி நடந்து கொள்கிறார் என்று சந்தேகிப்பவர்களும் உண்டு!



✢ நிதியமைச்சர் என். எம். பெரேரா வடக்கே வந்து ஒரு சுறுசுறுப்பான சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு கொழும்புக்குத் திரும்பிப் போயிருக்கிறார்! அந்த நாட்களில் என். எம். பெரேரா யாழ்ப்பாணம் வந்தாரென்றால் முற்றவெளியில் கூட்டம் நடக்கும் ஏராளமான வாலிபர்களும், பஸ் தொழிலாளர்களும், சுருட்டுத் தொழிலாளர்களும் அந்தக் கூட்டத்தில் பிரசன்னமாகி இருப்பார்கள்! அவர் எங்கே போனாலும் எந்தப் பக்கம் திரும்பினாலும் ஆர்வமுள்ள ஒரு இளைஞர் கூட்டம் அவரைச் சுற்றி 'ஜே ஜே' யென்று மொய்த்தவண்ணமே இருக்கும்! ஆனால் இந்தமுறை என். எம். பெரேரா வடக்கே வந்தபோது அத்தகைய வரவேற்பு எதுவும் அவருக்குக் கிடைக்கவில்லை! இந்த முறை அவரைச் சுற்றி நின்றவர்கள் அத்தனை பேரும் 'பெரிய' மனிதர்கள்! காரணம் என்ன? — அந்த நாட்களில் அவர் தோழர் என். எம் பெரேரா! இப்போதோ அமைச்சர் என். எம். பெரேரா!

# மணியுலகத்து ஓசைகள்

கலாநிதி க. கைலாசபதி

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன், மக்கள் சீனக் குடியரசுக்கு விஜயஞ்செய்ததும், பேச்சுவார்த்தைகள் நடாத்தியதும் இப்பொழுது பழஞ் செய்திகளாகிவிட்டன. இவற்றை ஒட்டி எத்தனையோ செய்திகளும் விளக்கங்களும் உலகப் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. இவ்வேளையில் பத்திரிகை எழுத்தாளர் எட்கா சினோ பற்றிய நினைவு பலருக்கு வருவது இயற்கையே.

ஏறத்தாழ இரு தசாப்தங்களுக்கு மேலாக அமெரிக்காவும் சீனாவும் 'கொடுக்கல் வாங்கல்' எதுவுமின்றி ஒன்றையொன்று பரம வைரியாக கருதிக் இருந்து வந்திருக்கின்றன. இந்த நீண்ட பகைமைக்கு அமெரிக்காவே பொறுப்பாக இருந்தபோதும் இரு நாடுகளும் 'போர் மொழிகள்' பேசிவந்தது உண்மை. இக்காலப்பகுதியில் இரு நாடுகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகளையும் 'ராஜதந்திர' உறவினையும் ஏற்படுத்தும் நோக்கத்துடன் அயராது உழைத்த தனியொரு நபர் எட்கா சினோ. அவரது முயற்சியாலேயே இன்றைய நிலைமை தோன்றியுள்ளது என்று கூறுவது வரலாற்றுக்குப் பொருந்தாத கூற்றாகும். ஆயினும் தனிமனிதரான சினோவின் பங்கு இதுவிஷயத்தில் குறிப்பிடப்படவேண்டியது என்பதை எவரும் மறுக்க இயலாது.

அரசியல் விஷயங்களை ஒருபுறம் வைத்துவிட்டுப் பத்திரிகையாளர் என்ற முறையில் நோக்கினாலும், சினோவின் சாதனைகள் குறிப்பிடத்தக்கவை என்பதில் ஐயமில்லை. ஜனாதிபதி நிக்ஸன் சீனாவுக்குச் செல்லுமுன் — ஆறு நாட்களுக்கு முன் — சினோ அகால மரணமடைந்தது சோகமான நிகழ்ச்சியாகும். உண்மையாகவே அவர் மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்திருக்கக்கூடிய சமயத்தில் அவற்றை அனுபவிக்க இருக்கவில்லை.

1960-ஆம் ஆண்டு, சீன-அமெரிக்க உறவு மிகவும் மோசமாக இருந்தபோது சினோ சீனாவுக்கு (நீண்டகால இடைவெளிக்குப்பின்) விஜயஞ் செய்தார். எத்தனையோ சிரமங்களுக்குப் பின் அமெரிக்க அரசாங்கத்திடமிருந்து 'பாஸ்போட்' கிடைத்தது. அமெரிக்கப் பிரசைகள்

சீனாவுக்குப் போகக்கூடாது என்று இருந்த காலம் அது. 'பாஸ்போர்ட்' கிடைத்தபின் சீன அரசாங்கத்திடம் 'விஸா' கோரி விண்ணப்பித்தபோது அவர்கள் அமெரிக்கப் பத்திரிகையாளரான எட்கார் சினோவுக்கு 'விஸா' இல்லையென்றும், ஓர் எழுத்தாளரும், வரலாற்றாசிரியருமான சினோவுக்குத் தனிப்பட்ட அழைப்பு உண்டென்றும் கூறினார்கள். இறுதியில் எவ்வளவோ சிரமப்பட்டுப் பெற்ற 'பாஸ்போர்ட்' பயன்படாமலே போயிற்று. 'பாஸ்போர்ட்' இல்லாமலே போனார் சினோ.


அன்று சீனப் பிரதமர் சூ-என்-லாய் சினோவுக்குக் கூறியவை பொருத்தம் என்றே கூற வேண்டும். ஏனெனில், சினோ சாதாரண பத்திரிகையாளர் அல்லர். சமகால நிகழ்ச்சிகளை நுனித்து நோக்கி அவற்றின் வரலாற்று முக்கியத்துவத்தை ஊகிக்கும் ஆற்றல் அவருக்கிருந்தது. அந்த வகையில் சினோ வரலாற்றாசிரியர்தான். இதற்குச் சிறந்த சான்று சினோ 1937-இல் வெளியிட்ட முதலாவது புத்தகமாகும். சீனாவின் மீது செம்மீனம் என்னும் நூல் தீர்க்கதரிசனம் போலப் பின் நிகழ்ந்தவற்றை முன்கூட்டியே உலகுக்கு எடுத்துக்கூறியது. தலைவர் மாசே-துங் பற்றி வெளியுலகுக்கு முதன்முதல் விவரித்த நூலும் அதுவேயாகும். இன்றுவரை அந்நூல் ஈடிணையற்று விளங்குகிறது. எத்தனையோ மொழிகளில் பல பதிப்புக்கள் வெளிவந்துள்ளன; அதைப் படித்துக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தோர் பலராம்.

எட்கார் சினோ, சீனத் தலைவர்களை அவர்களது 'அஞ்ஞாதவாச' காலத்தில் அறிந்தது முதல், பல நூல்கள் எழுதி வந்துள்ளார். இவற்றில் எதுவித பரபரப்பு அம்சமும் இல்லாதிருப்பது சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும். பத்திரிகைகளில் பரபரப்பை உண்டாக்குவதற்காகத் தலைவர்களைப்பற்றியும் நிகழ்ச்சிகளைப் பற்றியும் கற்பனை கலந்து 'சுவைபட' எழுதுவது சினோவின் தர்மம் அல்ல. இரகசியங்களைக் காப்பாற்ற நன்கு பழகிக்கொண்டவர் அவர். அதனாலேயே இறுதிவரை சீனத் தலைவர்களின் நம்பிக்கைக்கு உரியவராய் விளங்கினார். சீன - அமெரிக்கப் பேச்சுவார்த்தைகளுக்கே ஒரு கருவியாக — வாயிலாக — விளங்கினார்.

சீனப்பிரதமர் சூ-என்-லாய் சினோவின் நண்பர். அதற்குக் காரணங்கள் பல. அவற்றில் ஒன்று சினோவின் சுயசரிதையில் எழுதப்பட்டிருக்கிறது. 1937-ஆம் ஆண்டில் சினோ பீக்கிங் நகரிலே நிருபராகத் தங்கியிருந்தார். அவ்வாண்டு ஜுலை மாதம் யப்பானியர் திடீரெனப் பீக்கிங் நகரைத் தாக்கிக் கைப்பற்ற முற்பட்டனர். அச்சமயம் இருதய நோயினால் பீடிக்கப் பெற்றிருந்த தெங்-யிங்-சாஓ (சூ-என்-லாயின் மனைவி) பீக்கிங் நகருக்கு அயலில் உள்ள கோயில் ஒன்றிலே தலைமறைவாக வாழ்

ந்து சிகிச்சை பெற்றுவந்தார். யப்பானியரின் தாக்குதல் தொடங்கியதும் அவர் நகருக்குள் வந்துவிட்டார். நகருக்குள் யப்பானியர் கம்யூனிஸ்டுகளைக் கைது செய்துகொண்டிருந்தனர். பிரபல கம்யூனிஸ்டுத் தலைவரின் மனைவி என்ற வகையில் தெங்-யிங் பாடு இக்கட்டானதாயிருந்தது. நண்பர் ஒருவரின் வேண்டுகோளின்படி, சினோ திருமதி சூ-என்-லாயை தனது சீன வேலைக்காரப் பெண்களில் ஒருவராகக் கூறிக்கொண்டு, காரில் ஏற்றிப் பத்திரமாக வெளியேற்றிவிட்டார்.


சாதாரண பத்திரிகையாளராய் மட்டுமன்றி, மனிதாபிமானமும், துணிவும் நிறைந்தவராய் விளங்கியவர் சினோ. அக்காலத்தில் சீனக் கம்யூனிஸ்டுகள் வாழ்ந்த வடமேற்குப் பகுதிக்கு எவரும் செல்லக்கூடாது என்று கண்டிப்பான உத்தரவு இட்டிருந்தது சியாங்-கை-ஷேக் அரசாங்கம். போக்குவரத்துச் சாதனங்கள் இன்றி, கால்நடையாகச் சென்று, சியாங் போட்ட கட்டளையை மீறியவர் சினோ. அவருடைய முதல் மனைவி நிம் வேல்ஸ் இம்முயற்சிக்குப் பேருதவியாயிருந்தார். சினோ கம்யூனிஸ்டு அல்லர்; ஆனால், கண்டவற்றை நேர்மையாகவும் வரலாற்று உணர்வுடனும் எழுதியவர். சமீபத்தில 'செஞ்சீனா இன்று' என்னும் நூலை வெளியிட்டிருந்தார். இறுதி நாட்களில் சுவிட்சர்லாந்தில அவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது, சீனத் தலைவர்கள் இரு வைத்தியர்களையும் ஒரு வைத்தய உதவிப் பெண்ணையும் அனுப்பிவைத்தனர். அவர்கள் சினோவுக்கு வேண்டிய சிகிச்சைகளையும் பணிகளையும் செய்துவந்தனர். அரசியலை முதன்மைப்படுத்தும் சீனத்தலைவர்கள் அரசியல் ஒற்றுமை அற்ற ஒரு பத்திரிகை எழுத்தாளரை எவ்வளவுதூரம் நேசித்தனர் என்பதற்கு சினோவின் தொடர்பு சிறந்த எடுத்துக்காட்டு. இருபத்துஇரண்டு வயதில் சினோ முதன்முதல் பத்திரிகை நிருபராகச் சீனா சென்றார். அது பழைய சீனா; அன்றிலிருந்து இன்றுவரை சீனாவின் வளர்ச்சியை நன்கறிந்த அமெரிக்க எழுத்தாளரில் சினோவுக்கு நிகர் எவருமில்லை. சீனா அவரது முதற் காதல் போலும்!



✣ சுட்டித் தனமும் துடுக்குத் தனமும் கொண்ட சினிமா நடிகை லட்சுமி தனது மகளுக்கு வைத்திருக்கும் பெயர் என்ன தெரியுமா? சாந்தமீனா!

✣ 'தீபம்' ஆசிரியரும் 'மணிவண்ணன்' என்ற புனைபெயருக்கு உரியவருமான எழுத்தாளர் பார்த்தசாரதி எழுதியுள்ள "சமுதாய வீதி" என்ற தமிழ் நாவலுக்கு 1971-ம் ஆண்டுக்கான சாகித்திய அகாடமி பரிசு கிடைத்திருக்கிறது! பரிசுத் தொகை ரூபா 5000! சாகித்திய அகாடமி பரிசு கிடைத்த தமிழ் எழுத்தாளர்களில் வயதில் மிகவும் இளையவர் இவர்தான்! இவர் எத்தனையோ ஆண்டுகளாக எழுத்துத் துறையில் உழைத்து வந்த போதிலும் 'கல்கி' பத்திரிகையில் தொடர் கதைகள் எழுதத் தொடங்கிய பின்னர்தான் மக்கள் மத்தியில் மதிப்பு மிக்க ஒரு எழுத்தாளராக உயர்ந்தார்! சாகித்திய அகாடமி பரிசினால் இவருக்குக் கிடைத்துள்ள கௌரவத்தைக் காட்டிலும் கல்கி பத்திரிகையில் வெளிவந்த தொடர்கதைகள் மூலம் இவருக்குக் கிடைத்துள்ள கௌரவம் அதிகம்!

✣ இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சமீபத்தில் புனருத்தாரணம் செய்யப்பட்டிருக்கிறது. தேசிய இலக்கியம், மண் வாசனை, தனித்துவம், சமுதாயப் பிரச்சினைகளை இலக்கியங்களின் கருவாக்குவது முதலியன இந்த எழுத்தாளர் சங்கத்தின் முக்கியமான குறிக்கோள்கள். ஆக்கமுயற்சியுள்ள, துடிப்புள்ள இயங்குப சிறந்தஎழுத்தாளர்கள் பலர் இந்தச்சங்கத்தில் இருக்கிறார்கள். பெரும்பாலும் இவர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட அரசியல் கொள்கையைச்சேர்ந்தவர்களென்பதும் குறிப்பிடத்தக்கது.



✣ எல்லாருக்கும் நல்லவர்களாக நடந்துகொள்கின்ற நடிகர்கள் இரண்டுபேர் தமிழ் திரையுலகில் இருக்கிறார்கள். ஒருவர் ஜெமினி கணேசன், மற்றவர் ஜெய்சங்கர்! இருவருமே அருமையான பிஸினஸ் பேர்வழிகள். சிவாஜி அணி, எம் ஜீ ஆர் அணி என்ற எந்த அணியிலும் சேராமல் தங்கள் தொழிலை மிகவும் அமைதியாகச் செய்து வருபவர்கள் இந்த இரண்டு நடிகர்களும்! சென்றஆண்டில் இவர்கள் இருவரும்தான் மிகவும் அதிகமான படங்களில் நடித்திருக்கிறார்கள்!

✣ இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் தமிழ் தொழிலாளர்களின் குழந்தைகள் பலருக்கு அவர்களது பிறப்புச் சாட்சிப் பத்திரமும், பாடசாலை விடுகைப் பத்திரமும் சிங்களத்தில் மட்டுமே வழங்கப்பட்டுவருகின்றன. இதன்காரணமாக தாயகம் திரும்பியதும் அந்தத் தொழிலாளர்களும் அவர்களது குழந்தைகளும் அடையும் கஷ்டநஷ்டங்கள் கொஞ்சமல்ல! காருணியமிக்க நமது அரசாங்கமும் மற்றும் தலைவர்களும் இந்த விஷயத்தில் ஓரளவு மனிதத் தன்மையுடன் நடந்து அந்த ஏழைகளின் இன்னல்களைப் போக்கக்கூடாதா?

✣ தியாகராஜ பாகவதர் அந்தக் காலத்தில் மிகவும் புகழோடு இருந்த சினிமா நடிகர்! இவரது சிகையலங்காரமும், ஜவ்வாதுப் பொட்டும், சில்க் சட்டையும், ஜரிகை அங்க வஸ்திரமும் வெகு பிரசித்தமானவை! இவரை 'இமிடேட்' செய்து தங்களை அலங்கரித்துக் கொண்டவர்கள் பலர்! ஏழிசை வேந்தன் என்ற பட்டத்துடன் ஜாம் ஜாமென்று புகழின் உச்சியில் பறந்துகொண்டிருந்த இவருக்கு லட்சுமிகாந்தன் கொலை வழக்குடன் சனி பிடித்தது! இவரது கடைசிக்காலம் மிகவும் பரிதாபமாக இருந்தது! இப்போது வானொலியில் சில சமயங்களில் இவரது பாடல்களைப் போடுகின்றார்கள். அப்போது நமது கண்ணில் தெரிவது கடைசிக் கால பாகவதர் அல்ல! ஏழிசை வேந்தர்தான்! இவர் பாடியுள்ள பாடல்கள் இருக்குமட்டும் இவரது புகழ் இருந்துகொண்டே இருக்கும்! கலைஞனுக்குசாவில்லை என்பது உண்மைதான்.

✣ மதுவை விட போதையுள்ளது புகழ் என்பார்கள்! போதை தரும் வஸ்துக்கள் எல்லாமே ஆபத்தானவை! புகழும் அத்தகையதுதான்! இந்தப் புகழுக்காகத்தான் ஒவ்வொரு அரசியல் வாதியும் ஏங்குகிறான்! குடி போதையினால் தடுமாறுபவர்கள் இந்த நாட்டுக்குச் செய்யும் தீங்கைக் காட்டிலும் புகழ்ப்போதையினால் புத்தி கெட்டுப்போய் நடக்கும் ஒரு சில எம். பிக்கள் இந்த நாட்டுக்குச் செய்யும் தீங்கு அதிகமானது!

✣ 'கல்கி' பத்திரிகையில் நீண்ட காலம் ஓவியராகப் பணியாற்றியவர் மணியம். 'பார்த்திபன் கனவு' என்ற திரைப்படத்துக்கு மிகவும் அற்புதமான முறையில் ஆர்ட் டைரக்ஷன் செய்தவர். அமரர் கல்கி எழுதிய மகத்தான சரித்திரத் தொடர் கதைகளுக்கு மணியம் வரைந்த ஓவியங்கள் அழகுக்கு அழகு செய்ததை பாராட்டியோர் பல்லாயிரக் கணக்கானோர்! அந்த மணியத்தினது மகன் பெயர் செல்வன்! மறைந்துவிட்ட மணியத்தின் பெயரை மறுபடியும் நினைவூட்ட வந்திருக்கிறார் இந்தச் செல்வன்! மணியம் செல்வனது ஓவியங்கள் இந்தியப் பத்திரிகைகளை அலங்கரிக்கத் தொடங்கியிருக்கின்றன!

✣ கோடை காலத்தில் உடம்பெல்லாம் எரிவும், வெயர்வைப் பருவும் உண்டாகிறதல்லவா? கோடையின் வெப்பம் தான் காரணம்! வெப்பத்தைத் தணிக்கக்கூடிய உணவுகள், முக்கியமாகப்பானவகைகளைஉபயோகிக்கவேண்டும். இளநீர், மோர், பழரசங்கள் உகந்தவை. ஆனால் மாம்பழம் உஷ்ணமானது.


✣ வைட்டமின் ஏ உடலுக்கு மிகவும் அவசியமான உணவுச் சத்துக்களில் ஒன்று! இந்த உணவுச் சத்து குறைந்தவர்களுக்குத்தான் காலில் பித்தவெடிப்பு போன்ற வியாதிகள் வருகின்றன! கருவேப்பிலை, முட்டை, கீரை வகைகள், பச்சைக் காய்கறிகள் என்பனவற்றில் இந்தச் சத்து நிறைய இருக்கிறது!

✣ இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஊழல்கள் ஏராளம் இருக்கின்றன என்பது பகிரங்க ரகசியம். தனியொரு டைரக்டர்கள் சபையினால் மிகவும் பிரம்மாண்டமான இந்த ஸ்தாபனத்தை நிர்வகித்துக் கொள்வது மிகவும் கஷ்டம். இதன் காரணமாகத்தான் இந்த ஸ்தாபனத்திலுள்ள ஊழல்களைக் களைவது கஷ்டமாக இருக்கிறது. பிரந்திய அடிப்படையில் ஒவ்வொரு பிராந்திய அமைப்பும் ஒரு சுதந்திரமான டைரக்டர்கள் சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற முறையில் இந்த ஸ்தாபனம் இயங்கத் தொடங்கினால் மிகவும் நல்ல முறையில் இந்த ஸ்தாபனத்தின் சேவைகள் அமையும்! இந்த யோசனையை அரசாங்கம் சிந்தித்துப்பார்ப்பது நல்லது! எங்கள் எம். பிக்களில் யாராவது இந்த யோசனையை அரசாங்கத்தின் காதுகளில் போட்டு வைக்கலாம்!


✣ சர்வாதிகாரம் என்றைக்குமே ஆபத்தானது! கல்வித்துறையில் சர்வாதிகாரம் தலைதூக்குமேயானால் அதனைவிட ஆபத்தானது வேறு எதுவுமேயில்லை! நமது துரதிர்ஷ்டம்-நமது கல்வி இலாகாவில் உள்ள ஒவ்வொரு அதிகாரியுமே தன்னை ஒரு குட்டி சர்வாதிகாரியாக நினைத்துக்கொண்டுதான் செயல்பட்டு வருகிறார்கள்! நமது நாட்டின் கல்வி நிலைமை வரவர தாழ்ந்துகொண்டு போவதற்கு இதுதான் முதல் காரணம்! கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் ஒவ்வொருவரிடமும் சர்வாதிகார மனப்பான்மைதான் இருக்கின்றதே தவிர ஜனநாயக தன்மைகளை மருந்துக்கும் கூட காணோம்! இந்த நிலைமை மாறும் போதுதான் இந்த நாட்டின் கல்வி நிலை உயரும்!

✣ பிரபல சிங்கள சினிமா நடிகையான மாலினி பொன்சேகா கார் மட்டுமல்ல, ஸ்கூட்டரும் ஓட்டுவார்! இவருக்குப் பிடித்த பொழுதுபோக்கு என்ன தெரியுமா? தான் ஆசையோடு வளர்க்கும் பூனைக்குட்டிகளுடன் விளையாடுவது!

✣ தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கும் சீனத்து ஆட்சித் தலைவர் மாசேதுங் அவர்களுக்குமிடையில் ஒரு பொருத்த ஒற்றுமை உண்டு! கவிஞர்களாகவும் ஆட்சித் தலைவர்களாகவும் விளங்கும் தனிச் சிறப்புப் பெற்



றவர்கள் இந்த இரு தலைவர்களும்! இந்த இருவரையும் தவிர உலகத்திலேயே இன்னும் ஒரே ஒரு தலைவர்தான் இந்தத் தனிச் சிறப்புக்கு உரியவராக இருக்கிறார்! அவர் செனிகல் நாட்டு ஆட்சித் தலைவரான லியோபால்ட் சேகோர்!




✣ உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் பல்வேறு நாடுகளில் நடைபெறுவதற்கு காரணகர்த்தாவாக இருப்பவர் இலங்கையரான தனிநாயகம் அடிகளார்! முதல் மாநாடு கோலாலம்பூரிலும் இரண்டாவது மாநாடு சென்னையிலும் மூன்றாவது மாநாடு பாரிஸிலும் நடைபெற்று முடிந்திருக்கின்றன! நான்காவது மாநாடு யாழ்ப்பாணத்தில் இந்த ஆண்டு நடைபெறவேண்டும்! ஏற்கெனவே செய்திருந்த தீர்மானம் இதுதான்–ஆனால்...!

✣ ஆசிரியர்களாகக் கடமையாற்ற விரும்புகின்றவர்களிடம் இருக்கவேண்டிய பண்புகள் இரண்டு! ஒன்று அன்பு. மற்றது பொறுமை! இந்த இரண்டும் நிரம்பிய ஆசிரியர்களால்தான் மாணவர்களைச் செம்மையான வாழ்க்கை நெறியைக் கடைப்பிடிப்பவர்களாக ஆக்கமுடியும்! பாடபோதனை மட்டும் ஒரு ஆசிரியனது கடமை அல்ல! மாணவர்களைப் பண்பு மிக்கவர்களாக ஆக்குவதும் அவனது கடமையாகும்!

✣ முதலியார் பேராசிரியர் புலத்சிங்கள சோதிடக் கலையில் வல்லவர். சிங்களப் பத்திரிகைகளிலும் இவர் தனது கருத்துக்களை தெரிவித்து கட்டுரைகள் எழுதி வருவது வழக்கம். வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளுக்கும் இவர் சோதிடம் பார்த்து பலன் சொல்வது வழக்கம். ஆங்கிலப் பத்திரிகைகளில் இவருடைய பெயர் வருகின்ற காரணத்தால் உல்லாசப் பிரயாணிகள் மத்தியில் இவருக்கு நல்ல புகழ் இருக்கிறது. 1972ம் ஆண்டு இந்திராவின் ஆண்டாக அமையும் என்றும், வெகு விரைவிலேயே உலக வல்லரசுகளில் ஒன்றாக இந்தியா வளரும் என்றும் சென்ற ஜனவரி மாதத்தில் இவர் கருத்துத் தெரிவித்திருந்தார். பாராளுமன்றத் தேர்தல், பாகிஸ்தானுடனான யுத்தம், இப்போது கடைசியாக சட்டசபைத் தேர்தல்கள் எல்லாவற்றிலுமே இந்திராவுக்கு வெற்றிக்குமேல் வெற்றியாகத்தான் கிடைத்து வருகின்றன! இந்திரா விஷயத்தில் இவரது சோதிடம் நூற்றுக்கு நூறு உண்மை!

✣ இலங்கையில் உள்ள எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரே ஆசிரிய தொழிற்சங்கம் இருப்பது நல்லது என்ற குரல் இப்போது பரவலாக ஒலிக்கத் தொடங்கி வலுப்பெறத் தொடங்கியுள்ளது. ஆசிரியர்களும் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான். அவர்கள் ஒரே குரலாக ஒலித்தால்தான் உரிமைகளை வென்றெடுக்கமுடியும்!

✣ ஒரு காரியத்தைச் செய்து முடிக்கவேண்டும் என்று நினைத்தால் சரியாகத் திட்டமிட்டு அந்தக் காரியத்தை எப்படியும் செய்து முடித்தே தீர வேண்டும். அரை குறையாகக் காரியம் செய்கின்றவர்களை உலகமும் அரைகுறையாகவே விட்டுவிடும். அப்படிப்பட்ட மனிதர்கள் இந்த உலகத்தில் அரைகுறை மனிதர்களாகவே வாழ நேரிடும். எனவே, ஒரு காரியத்தைச் செய்யப் புகுந்த பின் அதை முடிக்காமல் அரை குறையாக விட்டுவிடவே கூடாது!



✣ பாகிஸ்தானின் முன்னாள் ராணுவ சர்வாதிகாரியாகி யாகானின் காதல் களியாட்டங்களை விவரிக்கும் கட்டுரைஒன்று "வீக் என்ட்" பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது! காமக் கலையில் மன்னனாகத் திகழ்ந்திருக்கிறார் இந்த மகானுபாவர்! நினைத்தவுடன் சுவைத்திடக் கூடிய முறையில் பல அழகிகளை தனது ஆசை நாயகிகளாக இவர் வைத்திருந்திருக்கிறார்! இந்த ஆசைநாயகிகளின் வேண்டுகோளுக்கு அமையத்தான் இவரது ஆட்சியில் பல அதிகாரிகளுக்கு பதவி உயர்வு கிடைத்திருக்கிறது! இப்போது யாகியாகானைப் பற்றி பல அருவருப்பான செய்திகளை வெளியிடும் வீக் என்ட்' தான் இந்திய பாகிஸ்தான் யுத்தத்தின்போது இவரது ஆட்சிக்குச் சாதகமான முறையில் செய்திகளை திரித்து வெளியிட்டு வந்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது!

✣ சீனத் தலைவர்களுடன் அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனின் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்த பின்னர் இருநாட்டுத் தலைவர்களுமாகச் சேர்ந்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள்! அதில் இரு நாடுகளுக்கும் ஒருசிறிதும் தொடர்பில்லாத காஷ்மீர் பிரச்சினையைப்பற்றியும் ஏதோ குழப்பித் தள்ளியிருக்கிறார்கள்! ஆனால் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி மிகவும் உஷாரான பேர்வழி. இந்த அறிக்கையைப் பார்த்த உடனேயே அமெரிக்காவை இந்திராகாந்தி எச்சரிக்கை செய்துவிட்டார்! சீனாவுடன் நல்லுறவு கொள்வதற்காக இந்தியாவின் விரோதத்தை அமெரிக்கா வளர்த்துக்கொண்டால் ஆசியாவின் சமாதானமும் அமைதியும் ஆபத்துக்குள்ளாகும் என்று இந்தியப் பிரதமர் இந்திரா விடுத்த எச்சரிக்கையில் நிறைந்த உண்மை இருக்கிறது!

✣ தமிழரசு அமிர்தலிங்கம் சமீபத்தில் தமிழ்நாடு சென்றிருந்தபோது அவருக்கு 'ஈழத்து நாவலர்' என்று பட்டம் சூட்டியிருக்கிறார்கள். அமிர்தலிங்கம் 'நா-வலர்' என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் அந்தப் பட்டம் தம்மோடு ஒட்டிக்



கொள்ளாமல் அவர் பார்த்துக் கொள்ளவேண்டும். 'ஈழத்துக் காந்தி' என்று ஒருவரைச் சொல்லலாம். 'இந்தியாவின் காந்தி' என்று தற்போது வாழ்ந்து வரும் ஒரு பெரியாருக்குப் பட்டம் கொடுக்கலாமா? இன்னுமொரு விஷயம்: இன்றைய தமிழ் நாட்டினருக்கு (ஆனந்த விகடன் மணியம் உட்பட!) எங்கள் ஆறுமுக நாவலரைப் பற்றி இன்னுந்தான் தெரியவில்லை! ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை தமிழ்நாட்டின் இன்றைய தலைமுறையினருக்காக அங்கே ஆறுமுக நாவலரை வெளிச்சம் போட்டுக் காட்டவேண்டும்!

✣ அரசாங்க விளம்பரங்கள் எதுவும் கடந்த சில மாதங்களாக 'லேக் ஹவுஸ்' பத்திரிகைகளில் வெளிவருவது கிடையாது! இந்த விஷயத்தை எவ்வளவு தூரம் மூடி மறைக்க முடியுமோ அவ்வளவு தூரம் மூடி மறைத்து வைத்திருக்கின்றன ''லேக்ஹவுஸ்'' பத்திரிகைகள்! இந்த விஷயம் வெளியில் தெரிய வந்தால் எங்கே மற்ற விளம்பரதாரர்களும் தங்களைப் புறக்கணிக்கத் தொடங்கி விடுவார்களோ என்ற பயம்தான் இதற்குக் காரணம்! தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்ற பழமொழி 'லேக்ஹவுஸ்' விஷயத்தில் நூற்றுக்கு நூறு வீதம் உண்மையாகிக் கொண்டு வருகிறது! இந்த ஸ்தாபனம் மட்டும் கொஞ்சம் பொறுப்புணர்ச்சியோடு நடந்திருந்தால் தமிழ் சிங்கள பேதம் இவ்வளவு தூரத்துக்கு வளர்ந்திருக்காது!

✣ புதிய அரசியலமைப்பை ஏற்க வேண்டுமென்று முழு மூச்சாகநிற்கும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களில் வட்டுக்கோட்டைத் தியாகராசாதான் மிக உறுதியாக நிற்பவர். இதனால் அவருக்கு ஏற்பட்டுவரும் எதிர்ப்புகள் மிக அதிகம். 'யார் எனக்கு என்ன ஊறு செய்தாலும் நான் அரசியலமைப்பை ஆதரிப்பேன்' என்கிறார் தியாகராசா. ஆனால், 'அரசியலமைப்பில் தமிழர்களுக்குச் சாதகமாக முக்கியமான மாற்றமும் செய்விப்பேன்!' என்று தமது ஆப்த நண்பருக்குச் சொல்லியிருக்கிறாராம் தியாகராசா. அப்படியான மாற்றத்தைச் செய்வித்து விடுவாரானால் எத்தனையோ வில்லங்கங்களைத் தீர்த்துவைத்த பெருமை தியாகராசாவுக்கே சேரும்!

## சென்ற இதழ் அட்டைப்படச் சொல்லோவியம்

### பரிசு பெறுபவர்கள்

கவிதை: எம். ஜே. எம். கமால், (திக்குவல்லை கமால்)
இல. 149, யோகபுர, திக்குவல்லை.

கதை: ராஜ தர்மராஜா, 133, பிரதான வீதி, திருகோணமலை.

### பாராட்டுக்குரியவர்கள்:

1. 'எழிலன்' 28 2/1, நியூனம் சதுக்கம், கொழும்பு-13.
2. வி. தாமோதரம்பிள்ளை, 26, வவசற் இடம், வெள்ளவத்தை.
3. செல்வி அஞ்சலி அன்ரனி, சியம்பா லேன், அண்டான் குளம், திருகோணமலை.
4. த. தயாநிதி, 90, பிரதான வீதி, பெல்மதுளை.
5. இரகுபதி பாலஸ்ரீதரன், 26, வவசற் இடம், வெள்ளவத்தை
6. வசந்தகுமார், 229, அம்பேகம, வெலிமடை.
7. எம். சுரேந்திரன், 24/28, மீத்தொட்டமுல்ல, வெள்ளம்பிட்டி
8. க, இராமலிங்கம், வெலிங்டன் வீதி அக்கரைப்பற்று.
9. சா. சோமதேவன், அரசகேசரிபிள்ளையார்கோயில், நீர்வேலி.
10. பா. விக்கினேஸ்வரி, 'மீரா பவனம்', அளவெட்டி வடக்கு
11. எஸ். இஸ்மாலிகா, 390, நுவரேலியா வீதி, புசல்லாவை.
12. செல்வி பிரேமா நடராசா, 'மோகன வாசா' கந்தபுராண வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
13. கன்னிமாறன், 22, கேக்லீஸ் வீதி, வெலிமடை.
14. செல்வி விசாலாட்சி மூக்கையா, 108, கண்டி வீதி, வத்துகாமம்
15. ஜி. ஜி. தேவதாசன், காரியாதிகாரி அலுவலகம், நானுட்டான்.
16. வீ. ஏ. மரியதாஸ், வஞ்சியன் குளம், வங்காலை.
17. க. மயில்வாகனன், தச்சன் தோப்பு, கைதடி.
18. செல்வி. க. லோகநாயகி, 8ம் குறிச்சி, அக்கரைப்பற்று.
19. ''மாத்தளை செல்லம்'' வி. கே. மயில்வாகனம். டெமேரியா, மாத்தளை பசறை.
20. இ. சி. சுந்தரலிங்கம், 40, சமாது ஒழுங்கை, திருகோணமலை.
21. செல்வி. எஸ். ராணி, அஞ்சலகம், கொக்கட்டிச்சோலை.

இவர்களைத் தவிர இன்னும், பலர் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு கொண்டிருக்கிறார்கள். அனைவருக்கும் நன்றி. பரிசுபெற்ற இரு எழுத்தோவியங்களும் இந்த இதழில் பிரசுரமாகின்றன.

சென்ற இதழ்
அட்டைப்படக் கதை

# நின்றுவிட்ட முகில்கள்

ராஜா தர்மராஜா

ஓடும் முகில்கள்.

சிந்தனையின் லயத்திற்கேற்ப, பஞ்சுக் குவியல்களாக முகில்கள் ஓடுகின்றன. மலை, கரடி, யானை போன்ற உருவங்களாக முகில்கள் உருக்கொள்கின்றன. பின், உருவங்கள் அழிந்து வேறு உருவங்களாகின்றன.

அவள் தனிமையில், சிந்தனை வசப்பட்டவளாக முகில்களை பார்த்தபடி இருக்கின்றாள்.

குளிர்மையைத் தரும் மர நிழல் அவள் மனதில் குளிர்ச்சியின் நெளிவு.

நாளை—

நாளை அவர் வரப்போகின்றார். அவரின் நினைவு அவர் தன்னில் உருக்கொண்ட நிகழ்ச்சிகள். அதன் சிந்தனை லயம்!...

திருமணம் முடிந்த மகிழ்வு! புதுத் தம்பதிகளின் ஊடல்; பின், கூடல்! இன்பமாய் கழிந்துவிட்ட நாட்கள். ஒவ்வொரு நாளும் புதுப் பொலிவுடன் விடிகின்றன.

புதுசுகளின் புதுமோகம்! மோகம் முப்பது நாள், ஆசை அறுபதுநாள் என்று அலுத்துக் கொள்ள அவர்களுக்கு இன்னும் வயதிருக்கின்றது. திருமணம் முடிந்து இன்னும் ஒரு மாதம் கூட ஆகவில்லை. அள்ளி அள்ளி பருக வேண்டும் என்ற ஆசை வெறியினூடு நெளியும் இன்ப நினைவுகள்!

அவனுக்குப் பட்டணத்தில் வேலை. கொழும்பு நகரம் அவளுக்குத் தெரியாது. அவனுடன் போகவேண்டும் என்ற புதுமோகம். கிராமத்தின் அமைதி அவளுக்கு அலுத்துவிட்டது. மெல்லிய தென்றலின் கீதம்; சங்கீத ஒலியெழும் கிராமத்தின் மாலை நேரம்; மனதில் எழும் மெல்லிய சலசலப்புப் போன்ற கிராமச் சூழ்நிலை; இவை எல்லாம் அவளுக்கு மாற்றாந் தாயாகத் தோன்றுகின்றன.

பத்திரிகைகளில் வரும் கலை நிகழ்ச்சிகள்; சினிமாப் படங்களின் விளம்பரங்கள்; ஏதோ சூடான செய்திகள். எல்லாம் பட்டணத்தில். பட்டணத்தின் படபடப்பு அவள் மனதிலும் படம் விரித்து ஆடுகிறது ...!

அவனுக்கு கிராமத்தின் சூழலை விட்டுப் போக மனமில்லை. என்றாலும் கடமை 'வா வா' என்று அழைக்கிறது. அவளைக் கூட்டிப்போக வழியில்லை. போவதற்கிடையில், அவளுடன் கிராமத்துச் சூழ்நிலையில் கிடைக்கக்கூடிய இன்பங்களை அனுபவிக்க மூளையும் வேகம் !

நின்ற விட, நாட்கள் மலையாக இல்லையே என்ற ஏக்கம் அவனுக்கு. அவளின் ஆசை இன்னும் தீரவில்லை. அவளுக்கும் அவனின் ஆசை தீரவில்லை!

' இன்னும் ஒரு சில நாட்கள் நிற்க முடியாதா ?'' என்று கேட்கும் இனபந்துக்கள்.

அவனுக்கும் நிற்க ஆசை தான். அவளை விட்டுப் போக மனமில்லை. என்றாலும் ...?

அவளின் கண்கள் கலங்குகின்றன. ஏதேதோ எல்லாம் சொல்லுகின்றான். ஏதோ பகிடியும் விடுகின்றான்.

அவனது பகிடியில் அவள் மெல்ல முறுவலிக்கிறாள். தலை நாணத்தால் கவிழ்கின்றது.

அவனுடன் தானும் வருவதாக அவள் வேண்டுகின்றாள்.

வீட்டுப் பிரச்சினை... இன்னும் எத்தனையோ பிரச்சினைகள் அவனுக்கு, அவன் சொல்லுகின்றான்: ''ஒரு ஆறு மாசம் போகட்டும்.... ''

அவனுடைய சொல்லில் நம்பிக்கையுடன் நாட்களைக் கழிக்கிறாள். இடையில் வரும் அவன் கடிதங்கள். அதில் உள்ள சில வரிகளை அவள் படிக்கும் போது முகத்தில் ரோசா மலரின் நிழல் தோன்றும்.

இடையிடையே அவன் வருவான். அவன் வரும் நாட்கள், அவளுக்கு புத்துயிர் அளிக்கும்.

''இன்னும் ஆறு மாசம் போகட்டும்......'' அவனுக்கு அவளை விட்டுப் பிரிந்திருப்பது இன்பமல்ல. நாட்களைக் கடத்துகின்றான்.

அவளுக்கு ஏக்கம்.

'ஏன் என்னைக் கூட்டிக் கொண்டு போகிறார் இல்லை ? அங்கே ஏதேனும்... ? சீச்சீ . . அவர் அப்படிப் பட்டவர் அல்லர்.'

சில நாட்களாக அவளில் ஒரு மாற்றம்.

அவன் லீவில் வரப்போகின்றான். நேற்றுத்தான் கடிதம் வந்தது. அவனுக்கு எப்பவும் பகிடிதான். கடிதத்திலும் பகிடிதான். அவன் கடிதம் அவளுக்கு ஒரு வசந்தம்.

நாளை...

அவன் வரப்போகின்றான்!

'அவன் வரட்டுமே!...யார் வரவேண்டாம் என்றது ? முன்பும் வாராந்தர லீவில் வருபவன் தானே ...! ஏதோ புதுமையாய் அவன் வரப்போகின்றான் ...... வரப்போகின்றான் என்று ஏன் சிந்திக்கவேண்டும் ?'

அவன் வராமலிருப்பதற்கு என்ன முனிவனா ?

'அவனிடம் எப்படிச் சொல்வது?'

'என்னத்தைச் சொல்வது?'

மரத்தின் நிழல், மெல்லிய தென்றலின் இன்பம் அவளில் பரவுகின்றது. அந்தி வானத்தின் செக்கச் சிவந்த நிறம். வயலுக்குச் சென்றவர்கள் வீடு

திரும்பிக்கொண் டிருக்கின்றார்கள். கிராமத்தில் எல்லாமே ஒரு லயத்தில், மெல்லிய சங்கீத ஒலியில் தான் நடக்கின்றன. எதுவுமே அமைதியின் நிழல் தான்.

அவள் தாய் ஆகப்போகின்றாள்!

தாய் ஆவது புதுமையா? எல்லாப் பெண்களுந்தான் தாய் ஆகப்போகின்றார்கள்!

தனிமையில் சிந்தனை லயம்! ஓடும் முகில்கள்; வர்ணங்களின் சேர்க்கை, அந்தி வானத்தின் குழப்பங்கள். ஏதோ ஒரு அந்தர உலகத்துக்கு செல்ல, முகில்கள் படி கட்டுகின்றன. படிகள் மாளிகை ஆகின்றன. திடீர் என்று முகில்கள் நின்றுவிட்டன. எல்லாமே நின்றுவிட்டன!'

'நானும் தாய்மையை அனுபவிக்கப் போகின்றேன். நாளை அவர் வருவார்... அவர் வரட்டுமே......? வரட்டுமா......? வந்தால்...... வந்தால் அவரிடம் எப்படித்தான் சொல்லுவது?

மெல்லிய சலனத்தின் ஒலி. அவனிடம் தான் சொல்லுவதை கற்பனை செய்து பார்க்கின்றாள்.

அவள் முகத்தில் அந்தி வானத்தின் சிவப்பு கோலம் கீறுகின்றது.

அவளின் சிந்தனை நின்றுவிட்டது. கண்கள் எதையோ நோக்க, தன்னை மறந்த சிந்தனையில் லயிக்கின்றாள். ஓடிய முகில்கள் நின்றுவிட. சிவப்பின் மெல்லிய வர்ணங்கள் சந்திர வதனத்தில் பதிகின்றன!

✣ ரஷ்யாவில் கலை நிகழ்ச்சிகள் நடக்கும் மண்டபத்துக்கு வெளியே பூச்செண்டுகள் விற்பனைக்குக் கிடைக்கும். நல்ல ரசிகர்கள் இந்தப் பூச்செண்டுகளை வாங்கிக்கொண்டு உள்ளே போவார்கள். தங்களுக்கு மிகவும் பிடித்த ஒரு நிகழ்ச்சியின் பின் கைதட்டல் நடக்கும்போது நேரே மேடைக்குச் சென்று கலைஞரிடம் பூச்செண்டைச் கொடுப்பார்கள். மேடைக்குப் போக முடியாமலிருந்தால் மேடையை நோக்கி வீசி எறிவார்கள். கலைஞர்களை உற்சாகப்படுத்தும் நல்ல பண்பு ரஷ்ய மக்களிடம் நிறைய இருக்கிறது!



வீட்டு உபயோகத்துக்கான எல்லா வித
செப்பு, பித்தளை பாத்திரங்களுக்கும்
பிரசித்தி பெற்ற
"யாழ் மார்க்"
அலுமினியப் பாத்திரங்களுக்கும்
கோயில் திருவாசி,
கொடித்தம்பம்
முதலியவற்றிற்கும்
யாழ்
உலோகத் தொழிற்சாலை
250, 254, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

✣ இலங்கையிலிருந்து 48 போத்தல் 'வெள்ளைச்' சாராயம் மேற்கு ஜேர்மனிக்குச் சமீபத்தில் அனுப்பப்பட்டது. அங்கே எமது சாராயத்தின் சுவையைப் பரப்பி ஒரு 'மார்க்கெட்'டை உண்டாக்குவதே நோக்கம். ஆனால் மேற்கு ஜேர்மனியிலிருந்து அந்தப் பார்சல் திரும்ப இலங்கைக்கே அனுப்பப்பட்டுவிட்டது. அனுப்பியவர்கள் ஒருகுறிப்பு எழுதியிருந்தார்கள்: "உங்களுடைய சரக்கின் பெயரை மாற்றி வேறு லேபல் போட்டு அனுப்பினால்தான் இதை இங்கே விற்பனைக்கு வைக்க முடியும். 'அராக்' (arrack) என்ற பெயருடன் எகிப்திலிருந்து இங்கே ஒருவகை வார்னிஸ் வந்து கொண்டிருந்தது. அது இப்போது தடைசெய்யப்பட்டுவிட்டது. அந்த 'அராக்' என்ற பெயரில் உங்கள் சரக்கை இங்கே விற்க முடியாது!" — சரிதானென்று சரக்கை அனுப்பியவர்கள் கொழும்பு கஸ்டம்ஸில் தங்கள் பார்சலை — 48 போத்தல் சாராயம் — திரும்ப எடுத்துவரப் போய்ப் பார்த்தால், அங்கே ஒரு வெறும் பெட்டி மாத்திரம் இருந்ததாம்! தோலிருக்கச் சுளையை முழுங்கிவிட்டார்கள் யாரோ!

✣ பணத்துக்கு அடிமையாகாதவரை அது ஒரு நல்ல ஊழியனாக இருக்கும்! பணத்துக்கு அடிமையாகிவிட்டால் அதுவே ஒரு மோசமான எஜமானன் ஆகிவிடும்! பணத்தை உங்கள் ஊழியனாக வைத்திருங்கள்! எஜமானனாக மாற்றிவிடாதீர்கள்!



✣ புதுமை டைரக்டர் என்று பெயர்பெற்ற ஸ்ரீதர் இப்பொழுது மிகவும் சோர்ந்துபோய் இருக்கிறார். கடைசியாக இவர் எடுத்து வெளியிட்ட மூன்று நான்கு தமிழ் இந்தி திரைப்படங்கள் ஒன்றன்பின் ஒன்றாக தோல்வியைத் தழுவியதுதான் இந்தச் சோர்வுக்குக் காரணம். இவருக்குக் கீழே உதவியாளர்களாக வேலை செய்து இவரிடம் டைரக்ஷன் பயின்ற இளைஞர்களான ராஜேந்திரனும், சக்கரவர்த்தியும் மிகவும் உற்சாகமாக இருக்கிறார்கள்; அவர்கள் தனித்து டைரக்ட் செய்த படங்கள் வெற்றிப்படங்களாக அமைந்ததுதான் அவர்களது உற்சாகத்துக்குக் காரணம். தோல்விக்குமேல் தோல்வி கிடைத்தால் சோர்வு உண்டாகும்! வெற்றிக்குமேல் வெற்றி கிடைத்தால் தன்னையறியாது உற்சாகம் உண்டாகும்! வெற்றியையும் தோல்வியையும் ஒன்றாக மதிக்கத் தெரிந்தவன்தான் கெட்டிக்காரன்!

✣ விளக்கெண்ணெயை உடம்பில் தேய்க்கக்கூடாது. தேய்த்தால் உடம்பெல்லாம் ரோமம் வளர்ந்துவிடக்கூடும்!



✣ நடிகை கே. ஆர். விஜயாவின் குடும்ப நண்பராக நடிகர் பாலாஜி இருந்துவருகிறார்! விஜயாவும் அவரது கணவர் வேலாயுதன் நாயரும் பாலாஜியுடன் மிகவும் அன்பாக நடந்துகொள்கிறார்கள். காரணம் என்ன?— விஜயா வேலாயுதன் நாயரை திருமணம் செய்வதற்கு காரணமாக இருந்தவர் பாலாஜி! முதன்முதலாக இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்தவர் பாலாஜிதான்! அதனால்தான் இந்த அன்பு!

✣ இலங்கையிலிருந்து இன்று வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளில் காரசாரமாக விஷயங்களை வெளியிடும் ஒரே பத்திரிகை 'சுதந்திரன்'. அரசாங்க சார்பான அரசியல் வாதங்களை கடுமையாகத் தாக்குகிறது சுதந்திரன். தாக்குகிற பத்திரிகைகள்தான் காரசாரமாக இருக்கும். பத்திரிகைத் தணிக்கை நடைமுறையிலிருக்கும் இக்காலத்திலுங்கூட 'தணிக்கிறவர் தணிக்கட்டும்' என்று மிகுந்த துணிச்சலுடன் எழுதிவருகிறார் ஆசிரியர் 'கோவை மகேசன்'. தணிக்கை அதிகாரிக்கு நல்ல வேலை கொடுக்கிற தமிழ்ப் பத்திரிகை சுதந்திரன்தான்!

✣ ஹிப்பிகளைப் பற்றிப் பலர் மிகவும் இழிவாகக் கருதுகிறார்கள். ஆனால் இது தவறு, ஹிப்பிகளில் சிலர் மெத்தப் படித்தவர்களாக இருக்கிறார்கள். அருமையாக தத்துவம் பேசுகிறார்கள், உலகத்தில் இன்று பணம்தான் ஆட்சி செலுத்துகிறது. பணத்திற்கு இருக்கும் இந்த மதிப்பை இல்லாமல் செய்ய வேண்டும். யாருக்கு என்ன பொருள் வேண்டுமானாலும் அது இலகுவில் கிடைக்கக்கூடியதாக இருக்க வேண்டும். இதுதான் ஹிப்பிகளின் தத்துவமாக இருக்கிறது. இந்தத் தத்துவத்தை குறை சொல்ல முடியுமா?

✣ திரைப்பட நடிகனாகவும், கதைவசன கர்த்தாவாகவும் சினிமாத்துறைக்குள் நுழைந்த ஏ. பி. நாகராஜன், இப்போது பெரிய டைரக்டராகவும் தயாரிப்பாளராகவும் வளர்ந்து விட்டார்! இவர் தயாரிக்கும் படங்கள் எல்லாமே வசூலில் சக்கை போடு போடுகின்றன! அந்த நாட்களில் இவருக்கு ம. பொ. சியின் தமிழரசுக் கழக அரசியலில் அதிக ஆர்வம் இருந்தது! தி. மு. கவுக்கு எதிரணியில் ம. பொ. சி இருந்த காலம் அது! தி. மு. கவை தாக்குவதற்கென்றே ''சாட்டை'' என்ற பெயரில் ஒரு பத்திரிகையையும் நடத்தி வந்தார் நாகராஜன்! இப்போது இவர் அரசியலின் பக்கமே போவது கிடையாது! ஒரு சிலருக்கு பணம் சேர்ந்ததும் அரசியலிலுள்ள தீவிரமான ஆர்வம் போய்விடுகிறது! அந்த வகையைச் சேர்ந்தவர்தான் ஏ. பி. நாகராஜனும்!

சென்ற இதழ் அட்டைப்படக் கவிதை:

# சுகம் எதோ....?


புத்தாடை புனைந்துமே
புதுமணம் பூசியே
அத்தானின் வரவினை
ஆவலாய் நோக்கிடும்......
பாவையின் நெஞ்சிலே
பொங்கிடும் மகிழ்வெதோ......?

மடித்தொரு காலிலே
மணிக்கரம் பதித்ததில்
விடிவெழில் மதிமுகம்
வைத்துமே பார்த்திடும்......
பாவையின் மலரிதழ்
புலர்ந்திடும் பொருளெதோ... ?

'இத்தனை நாட்களாய்
எப்படி மறந்தெனை
நித்திரை செய்தது ?
நவில்கவே' என்றதோ.. ...
பாவையின் பார்வைகள்
பொழிந்திடும் கேள்விகள்.....?

'இனி இர வாகிடும்
இனித்திடும் கதைபல......!'
நினைத்ததும் வேலியாய்
நாணத்தை வேய்ந்திடும்.....
பாவையின் மெய்யெலாம்
பரவிடும் சுகமெதோ......?

திக்குவல்லை கமால்



✣ மார்ச்மாத பிற்பகுதியிற் மிக இனிமையான விருந்தொன்று ஒவ்வொரு நாட் காலையிலும் கிடைத்தது. அதை வழங்கியவர்கள் சென்னை வானொலியினர். திருமுருக கிருபானந்தவாரியார் சிலதினங்கள் தொடர்ச்சியாகச்செய்த ராமாயணப் பிரசங்கங்கள் சென்னை வானொலியில் ஒவ்வொருநாளும் காலை எட்டு மணிக்கு ஒலிபரப்பாயிற்று. வாரியாரின் பிரசங்கத்தைப்பற்றிச் சொல்லவா வேண்டும்? மிகவும் அற்புதமாக இருந்தது! வாழ்க்கைக்கு மிகவும் அவசியமான கருத்துக்கள் பலவற்றை தகுந்த உவமைகளுடன் எல்லாருக்கும் விளங்கக்கூடிய முறையில் சுவையுடன் சொல்வதில் வாரியாருக்கு நிகர் அவரேதான்! முன்னரெல்லாம் அடிக்கடி வாரியார் இலங்கைக்கு வந்து போய்க்கொண் டிருந்தார்! ஆனால் கடந்தசில ஆண்டுகளாக ஏனோ அவரை இந்தப் பக்கம் காணவில்லை! தொடர்ச்சியாக அவரது பிரசங்கங்கள் சிலவற்றை கேட்க வாய்ப்பளித்த சென்னை வானொலியினருக்கு நன்றிசொல்லவேண்டும்!

✣ நீங்கள் ஞாபகசக்தி குறைந்தவரா? கவலைப்படாதீர்கள். நல்ல ஞாபகசக்தியுள்ளவர்களை விட உங்கள் வாழ்க்கை சந்தோஷமானதாக இருக்கும். கடந்துபோன துயரங்களை நீங்கள் மறந்துவிடுவீர்கள். உங்கள் நண்பர்கள் உங்களுக்குச் செய்த துரோகங்களை நீங்கள் மறந்துவிடுவீர்கள். கவலைப்படுவதற்கு உங்கள் மனத்தில் எதுவும் இருக்காது!

✣ வங்காள தேசத்தை இலங்கைஅரசு அங்கீகரித்தபிறகு அங்கிருந்து இலங்கைக்கு வந்த முதலாவதுகடிதப் சாவகச்சேரி எம். பி. நவரத்தினத்துக்கு வந்திருக்கிறது. பாரிசில் நடைபெற்ற உலகப் பாராளுமன்றங்களின் மாநாட்டில் பங்களாதேஷ் விடுதலைப் போராட்டத்தை நவரத்தினம் தீவிரமாக ஆதரித்துப் பேசியதற்காகவும், இலங்கையில் தமிழரசுக் கட்சியினர் பங்



களாதேஷ் போராட்டத்துக்கு தெரிவித்த ஆதரவுகளுக்காகவும் நன்றிதெரிவித்து இக்கடிதத்தை பங்களாதேஷ் குடியரசுத் தலைவர் டாக்டர்சௌத்திரி எழுதியிருக்கிறார்.

✣ உலகின் பல பெரிய பணக்காரர்கள் சுவிட்சர்லாந்தில் போய் வசிக்கிறார்கள்; அந்த நாடு ஒரு சுகவாசஸ்தலம் என்பது மட்டும் காரணமல்ல. 'கறுப்பு'ப்பணங்களைப் போட்டு வைக்க அந்த நாட்டு வங்கிகளில் வசதியிருக்கிறது. உலகிலேயே வருமான வரிவீதம் குறைவாக உள்ளநாடும் சுவிஸ்தான்!

✣ வீதிகளிலும் பகிரங்க இடங்களிலும் காதலர்கள் முத்தமிட்டுக்கொள்வது மேல்நாடுகளில் சர்வசாதாரணம். ஆனால் எல்லா நாடுகளிலுமே இப்படியல்ல; மாஸ்கோவில் மே தினம், ஒக்டோபர் புரட்சித் தினம், புத்தாண்டுத் தினம் ஆகிய மூன்று நாட்கள் மட்டுமே பகிரங்க இடங்களில் முத்தமிடலாம்!

✣ இந்தியாவிலேயே மிகஅதிகமாக விற்பனையாகியுள்ள நூல் எது தெரியுமா? ராஜாஜி எழுதியுள்ள 'ராமாயணமும் மகாபாரதமும்' — 700,000 பிரதிகள் விற்பனையாகியிருக்கிறது! நேருவின் 'டிஸ்கவரி ஒவ் இந்தியா' கூட 25,000 பிரதிகள் தான் விற்பனையாகியிருக்கின்றது. தகழி சிவசங்கரப்பிள்ளையின் 'செம்மீன்' 20,000 பிரதிகள் விற்பனையாகியுள்ளது.

---

**கேள்வி – பதில்**
**'வெள்ளி'**
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

---


அச்சில்

## 6-ம் வகுப்பு 2-ம் தவணைக்குரிய நூல்கள்


1. புதிய சமூகக்கலை
   (யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு மாவட்டங்களுக்கான தனித்தனி விசேட பதிப்புகள்)
2. ENGLISH (Exercise for Book IV)
3. புதிய கணிதப் பயிற்சி

ஷெ நூல்கள் யாவும் அரசினரின் புதிய பாடத்திட்டத்துக்கமையத் தொகுக்கப் பெற்றவை.

வெளியீடு:-

**சுந்தரம் புத்தகசாலை,**
**அச்சுவேலி.**

✤ நிதியமைச்சர் என்: எம்: பெரேரா வடக்கே வந்து போனபோது அவரோடு கூடவே பெர்னுட் சொய்சாவும் வடக்கே வந்து போயிருக்கிறுர்! பெர்னுட் வடக்கே வந்துபோன தற்குக் காரணம் இருக்கிறது: இப்போது சமசமாஜக் கட்சியின் பொதுக் காரியதரிசியாக இருப்பவர் பெர்னுட். கட்சி



யைக் கட்டி வளர்க்கும் பெரும் பொறுப்பு இவர் கையில் இருக்கிறது: இவர் இங்கே வந்து போனதற்கு முக்கியமான காரணம் அதுதான்! ஆனுல் இவர்கள் என்னதான் செய்தாலும் வடக்கில் இனி சமசமாஜக்கட்சி வளரப்போவது கிடையாது! ஒருகாலத்தில் வடக்கில் மிகவும் பலம்பொருந்திய கட்சியாக சமசமாஜக்கட்சி இருந்தது உண்மைதான். அந்த நாட்களில் கம்யூனிஸ்ட் கட்சியைக் காட்டிலும் சமசமாஜக் கட்சிதான் வடக்கில் மிகவும் பலம் வாய்ந்ததாக இருந்தது! ஆனுல் இப்போதோ நிலைமை மாறிவிட்டது! இடது சாரி மனப்பான்மை உள்ளவர்களில் பெரும்பாலானுேர் இப்போது கம்யூனிஸ்ட் கட்சியைத்தான் ஆதரிக்கிறுர்கள்! தோழர் வி, பொன்னம்பலத்தின் சலியாத உழைப்பும் மிக அருமையான பண்புகளும்தான் இதற்குக் காரணம்! இனி கம்யூனிஸ்ட் கட்சியை மீறி சமசமாஜக் கட்சி வடக்கில் வளரவே முடியாது!

ஆங்கிலம் பயிலும் மாணவர்களுக்கு, உற்ற துணைவன்:

வரதரின்

**மாணவர் அகராதி**

[ஆங்கிலம்-ஆங்கிலம்-தமிழ்]

VARATHAR

**STUDENTS' DICTIONARY**

English-English-Tamil

விலை ரூபா 5-00 தபால் செலவு சதம் 60

**வரதர் வெளியீடு,** 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.



* '...தனி நாடு கோரிக்கையைப் பற்றி...........'
* 'அமிர்' ராஜிநாமா செய்த காரணம் என்ன?

வெள்ளி